மலர்-5 இதழ்-108 பிப்ரவரி 16-28 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்




# திருநள்ளாறு செல்ல உரிய காலம்

# மகப்பேறு பாக்கியம் அருளும் கோமதியம்மன்

சங்கரன்கோவிலில் அமைத்துள்ள ஸ்ரீ கோமதி அம்மன் சன்னதி மஹா யோகினி சக்தி பீடம் ஆகும்.

தாட்சாயிணியின் உடல் பகுதிகள் விழுந்த 51 பிரதான சக்தி பீட இடங்களில் அம்பிகையின் நெற்றியின் உள்பகுதி, அதாவது குண்டலினி எழும்பி பாம்பு போல் படம் விரித்து ஆடும் பகுதியான சஹஸ்ராரம் விழுந்த பகுதியில்தான் ஸ்ரீ கோமதி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

கோமதியம்மனுக்கு செவ்வரளிப் பூக்களைப் பரப்பி, அதன் மீது மாவிளக்கேற்றி வழிபடும் முறை சிறப்பாகக் கருதப்படுகிறது. அர்த்தஜாம பூஜை முடிந்த பின் தரப்படும் பிரசாதப்பாலை, தொடர்ந்து 30 நாட்கள் பருகினால் மகப் பேறு இல்லாதவருக்கு மகப்பேறு கிட்டும் என்கிறார்கள்.




# பூச்சி தொல்லை தீர்க்கும் சங்கரன்கோவில்

வீடுகளில் பூச்சி, பல்லி, பாம்புத் தொல்லை இருந்தால், சங்கரன் கோவிலில் உள்ள சங்கரலிங்கனாருக்கு வேண்டிக் கொண்டு, தொல்லை தரும் பூச்சிகளின் வெள்ளி உருவங் களை வாங்கி காணிக்கையாக அளித்தால் மேற்கண்ட பூச்சிகளின் தொல்லை எளிதாக தீர்ந்துவிடும்.

# திருநள்ளாறு செல்ல உரிய காலம்

திருநள்ளாறு கோவிலில் சனிபகவானுக்கு உரிய சனிக்கிழமைகளில் தரிசித்தால்தான் பலன் அதிகம் கிடைக்கும் என்ற நம்பிக்கை அதிகம் உள்ளது. இதனால் இத்திருக்கோவிலில் சனிக்கிழமைகளில் கூட்டம் அலைமோதுகிறது. மற்ற நாட்களில் கூட்டம் குறைவாகவே காணப்படுகிறது.

ராகுகாலத்தில் ராகுவை வழிபடுவதைப் போன்றே சனி பகவானை, சனிஹோரையில் வழிபட்டாலும், சனிக்கிழமை சனி பகவானை தரிசித்த முழு பலன் கிடைக்கும். அதன்படி பார்த்தால் வாரத்தின் அனைத்து நாட்களிலும் சனிஹோரை வருகிறது.

| | |
|---|---|
| ஞாயிறுகாலை: .......... | காலை 10–11, மாலை 5–6, |
| திங்கள்:..................... | காலை 7–8, |
| செவ்வாய்: ................. | பகல் 11–12, இரவு 6–7, |
| புதன்: ........................ | காலை 8–9, |
| வியாழன்: .................. | பகல் 12–1, இரவு 7–8, |
| வெள்ளி:..................... | காலை 9–10, மாலை 4–5, |
| சனிக்கிழமை:............ | காலை 6–7, மதியம் 1–2, இரவு 8–9, |




ஆக இந்த வார நாட்களில் சனிஹோரையில் நேரங்களில் சனி பகவானை வழிபட்டால் சனி தோஷங்கள் பிரச்சனை தீர்ந்து சனிபகவானின் பரிபூரண அருளைப் பெறலாம்.

www.aanmeegamalar.com

## பூஜையின் முழுபலனை பெற உதவும்

# வசிக்கும் நாட்டிற்குரிய சங்கல்ப வர்ஷம்

வேத மந்திரங்கள் கூறும் போது ஸங்கல்பம் செய்யப்படும். ஸங்கல்பம் என்பது இறைவனிடம் உறுதி மொழி தந்து அதைப் பின்பற்றுவதற்காக கூறப்படும். அந்தவகையில் ஸங்கல்பம் செய்யும் மந்திரத்தை கீழே பார்க்கலாம்.

**மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா**
**ஸ்ரீபரமேச்’வர ப்ரீத்யர்த்தம் சு’பே சோ’பனே**
**முஹூர்த்தே, ஆத்ய ப்ரஹ்மண:**
**த்விதீய பரார்த்தே, ஸ்ரீ ச்’**
**வேதவராஹ கல்பே,**
**வைவஸ்வத மன்வன்தரே,**
**அஷ்டாவிம்ச’திதமே,**
**கலியுகமே, ப்ரதமேபாதே, ஜம்பூத்வீபே,**
**பாரத வர்ஷே, பரதக் கண்டே, மேரோ:**
**தக்ஷிணே பார்ச்’வே, ச ’காப்தே, அஸ்மின்**
**வர்த்தமானே, வ்யாவ ஹாரிகே, ப்ரபவாதி**
**ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்யே,.**

மேற்கண்ட மந்திரங்களைகூறி இந்தியாவில் ஸங்கல்பம் செய்யலாம். ஆனால் இதே மந்திரத்தை வெளிநாடுகளில் வசிப்பவர்கள் கூறி ஸங்கல்பம் செய்யும் போது மேற்கண்ட இடத்தில் பாரத வர்ஷே என்று வரும் இடத்தில் எந்த இடத்தில் வசிக்கிறீர்களோ அந்த இடத்தின் பெயரைக் கூறி சங்கல்பம் செய்தால்தான் பூஜையின் முழு பலனை அடைய முடியும்.

அயல் நாடுகளில் உள்ளவர்கள் ஸங்கல்பங்கள் செய்யும் பொழுது "பாரத வருஷே" என்ற இடத்தில் என்ன சொல்வது என்ற சிறு தடுமாற்றம் இயற்கையாகவே வரும், இந்த ஐயத்தைப் போக்க எந்த கண்டத்தில் இருப்பவர்கள், என்ன வார்த்தையை பயன்படுத்த வேண்டும் என்று கீழே விரிவாக கொடுத்துள்ளோம்.

01. இந்தியா – பாரத வர்ஷம்.,
02. அட்லாண்டிக் பெருங்கடல்
– கேதுமாலா வர்ஷம்.,
03. ஐரோப்பா – ஹரி வர்ஷம்.,
04. வடதுருவம் – இலாவ்ருத வர்ஷம்.,
05. தென் அமெரிக்கா – குரு வர்ஷம்.,
06. வட அமெரிக்கா – ஹிரண்யக வர்ஷம்.,
07. நிக்ஷீமீஸீ லிணீஸீ – ரம்யக வர்ஷம்.,
08. ஆசியா – கிம்புருஷ வர்ஷம்.,
09. பஸிபிக் சமுத்திரம் – பத்ராஸ்வ வர்ஷம்.

அயல் நாடுகளில் ஸங்கல்பங்களுக்கு இவற்றை கையாளலாம்.

– தொகுப்பு கீதா ராஜன்
தொடர்பு எண்: +91–8825844033




www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

# 64 பைரவர்களும் யோகினிகளும்




அசுரனுடன் தாய் காளி போரிடும் சமயம், காளியின் வியர்வை துளிகளில் இருந்து வெளிவந்தவர்கள் பிராமணி, வைஷ்ணவி, மகேஸ் வரி, இந்திராணி, கௌமாரி, வராஹி, சாமுண்டா மற்றும் நரசிம்ஹி என்பவர்கள் ஆவர். அந்த அஷ்ட மாத்ரிகாஸ் ஒவ்வொருவரும் தத்தம் உடல்களில் இருந்து தலா எட்டு தெய்வீக சக்திகளை யோகினிகள் எனும் வடிவத்தில் வெளிக் கொண்டு வந்தனர். இப்படியாக மொத்தம் 64 தாந்த்ரீக யோகினிகள் வெளி வந்தார்களாம்.

இப்படியாக 64 யோகினிகள் வெளிவந்த அதே நேரத்தில் தக்ஷ யாகத்தை அழிக்க சிவபெருமான் மூலம் வெளிவந்த மஹா கால பைரவர் மூலம் முதலில் எட்டு பைரவர்கள் வெளிவர, அந்த எட்டு பைரவர்களும் தத்தம் உடலில் இருந்து தலா ஏழு பைரவர்களை வெளிப்படுத்த, இப்படியாக அங்கு வெளிவந்த மொத்தம் 64 பைரவர்கள் அனைவரும் தாந்த்ரீக கலைகளில் சிறந்து விளங்கிய 64 யோகினிகளை மணந்து கொண்டு அவர் களது துணைவர்கள் ஆயினர்.

அவர்கள் அனைவருமே மஹா கால பைரவரது தலை மையில் அவரது கட்டுப்பாட்டில் இருந்தார்கள். மஹா கலா பைரவர் மூலம் முதன் முதலில் தோன்றிய

எட்டு பைரவர்களின் பெயர்கள் அசிதங்கா, ருரு, காண்டா, க்ரோதா, உன்மட்டா, கபாலா, பீசானா மற்றும் சம்ஹாரா என்பன ஆகும்.

இந்த வகையில் பைரவரை வழிபடும்போது இந்த யோகினிகளையும் சேர்த்து வழிபட்டால் அதித பலன்கள் கிடைக்கும். பொதுவாக யோகினிகள் என்பவர்கள் மிகுந்த நற்பலன்களை மட்டுமே அருளும் தன்மையுடையவர்கள். இந்த யோகினிகள் எளிதாக மனிதர்கள் செய்யும் பூஜைக்கு அருள்புரிவார்கள், இதனால்தான் பல்வேறு மந்திர தந்திர கலைகளை கற்பவர்கள் இந்த யோகினிகளை தங்களது மந்திர தந்திரங்களுக்கு பயன்படுத்தும் விதம் பூஜைகளை செய்வார்கள்.

செல்வம், பெயர், புகழ், பதவி, ஆடம்பரம், உல்லாசமான வாழ்க்கை, மகிழ்ச்சி, போன்ற சுகபோகங்களை எளிதாகத் தரக்கூடியவர்கள்.

இந்த யோகினிகளுக்குரிய பைவர்கள் யார் என்பதை விரிவாக பார்ப்போம்...

1. நீலகண்ட பைரவர் (ஜயா யோகினி)
2. விசாலாக்ஷ பைரவர் (விஜயா யோகினி )
3. மார்த்தாண்ட பைரவர் (ஜயந்தி யோகினி )
4. முண்டனப்ரபு பைரவர் (அபராஜிதா யோகினி)
5. ஸ்வஸ்சந்த பைரவர் (திவ்யமோகினி யோகினி)
6. அதிஸந்துஷ்ட பைரவர் (மஹா யோகினி)
7. கேஸர பைரவர் (ஸித்தமோகினி யோகினி)
8. ஸம்ஹார பைரவர் (கணேஸ்வர யோகினி)
9. விஸ்வரூப பைரவர் (ப்ரேதாஸிந்யை யோகினி)
10. நாநாரூப பைரவர் (டாகினி யோகினி)
11. பரம பைரவர் (காளி யோகினி)
12. தண்டகர்ண பைரவர் (காளராத்ரி யோகினி)
13. ஸீதாபத்ர பைரவர் (நிஸாஸாரீ யோகினி)
14. ஸிரீடன் பைரவர் (டங்கார்ரீ யோகினி)
15. உன்மத்த பைரவர் (வேதாள்யா யோகினி)
16. மேகநாத பைரவர் (ஹும்காரி யோகினி)
17. மநோவேக பைரவர் (ஊர்த்துவகேஸி யோகினி)
18. க்ஷேத்ரபாலக பைரவர் (வ்ருபாட்சி யோகினி)
19. வ்ருபாக்ஷ பைரவர் (ஸுஷ்காங்கீ யோகினி)
20. கரால பைரவர் (நரபோஜினி யோகினி)
21. நிர்பய பைரவர் (பட்சாரி யோகினி)
22. பிஸித பைரவர் (வீரபத்ரா யோகினி)
23. ப்ரேக்ஷித பைரவர் (தூம்ராக்ஷி யோகினி)
24. லோகபால பைரவர் (கலகப்ரியா யோகினி)
25. கதாதர பைரவர் (கோர ரக்தாக்ஷி யோகினி)
26. வஜ்ரஹஸ்த பைரவர் (விஸ்வரூபி யோகினி)
27. மஹாகால பைரவர் (அபயங்க்ரி யோகினி)
28. பிரகண்ட பைரவர் (வீரகௌமாரி யோகினி)
29. ப்ரளய பைரவர் (சண்டிகை யோகினி)
30. அந்தக பைரவர் (வாராஹி யோகினி)
31. பூமிகர்ப பைரவர் (முண்டதாரணி யோகினி)
32. பீஷண பைரவர் (ராக்ஷஸி யோகினி)
33. ஸூலபால பைரவர் (பைரவி யோகினி)
34. குலபால பைரவர் (த்வாங்க்ஷிணி யோகினி)
35. ருண்டமாலா பைரவர் (தூம்ராங்கி யோகினி)
36. ரக்தாங்க பைரவர் (ப்ரேதவாஹினி யோகினி)
37. பிங்களேக்ஷ பைரவர் (கட்கினி யோகினி)
38. அப்ரரூப பைரவர் (தீர்க்க லம்போஷ்யா யோகினி)
39. தாரபாலந பைரவர் (மாலினி யோகினி)
40. ப்ரஜாபாலந பைரவர் (மந்த்ர யோகினி)
41. ஸூல பைரவர் (நீலி யோகினி)
42. மந்த்ரநாயக பைரவர் (சக்ரிணி யோகினி)
43. ருத்ர பைரவர் (கங்காளி யோகினி)
44. பிதாமஹ பைரவர் (புவனேஸ்வரி யோகினி)
45. விஷ்ணு பைரவர் (த்ரோடகீ யோகினி)
46. வடுகநாத பைரவர் (மஹாமாரீ யோகினி)
47. கபால பைரவர் (யமதூதி யோகினி)
48. பூதவேதாள பைரவர் (காட்டேரி யோகினி)
49. த்ரிநேத்ர பைரவர் (கேசினி யோகினி)
50. த்ரிபுராந்தக பைரவர் (மர்த்தினி யோகினி)
51. வரத பைரவர் (ரோமஜங்கே யோகினி)
52. பர்வதவாகன பைரவர் (நிர்வாண யோகினி)
53. சசிவாகன பைரவர் (விஸாலி யோகினி)
54. கபாலபூஷண பைரவர் (கார்முகி யோகினி)
55. ஸர்வக்ஞ பைரவர் (தோத்யமின யோகினி)
56. ஸர்வதேவ பைரவர் (அதோமுக்யை யோகினி)
57. ஈஸாந பைரவர் (முண்டாக்ரதாரிணி யோகினி)
58. ஸர்வபூத பைரவர் (வ்யாக்ரிணி யோகினி)
59. கோரநாத பைரவர் (தூங்க்ஷிணி யோகினி)
60. பயங்கர பைரவர் (ப்ரேதரூபிணி யோகினி)
61. புக்திமுக்தி பலப்ரத பைரவர் (தூர்ஜடை யோகினி)
62. காலாக்நி பைரவர் (கோரா யோகினி)
63. மஹாரௌத்ர பைரவர் (கராளி யோகினி)
64. தக்ஷிணாபிஸ்தித பைரவர் (விஷலங்கர்யா யோகினி )

www.aanmeegamalar.com




# அன்பு இருந்தால் இறைவன் அருள்வான்

கடவுள் எப்போதும் அன்பைத்தான் பார்ப்பார், உயர்வு, தாழ்வு, வசதி, ஏழ்மை, மேல்ஜாதி, கீழ்ஜாதி போன்றவற்றிற்கு இறைவன் முக்கி யத்துவம் தருவதில்லை என்பதை பல்வேறு புராணங்கள், திருவிளையாடல்கள் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இவ்வாறு இறைவன் அன்பிற்கு மட்டுமே அடங்குவான் என்பதை மாணிக்கவாசகர் மிக அழகாக பாடியிருக்கிறார்.

மணிவாசகர் உயர் குடியில் பிறந்தவர். நன்கு படித்தவர். பாண்டிய மன்னனிடம் அமைச்சராக இருந்தவர். தமிழில் புலமை பெற்றவர். ஊன் உருக, உயிர் உருக பாடல்கள் பாடி இருக்கிறார்.

மாறாக,

கண்ணப்பன் வேடுவர் குலத்தில் பிறந்தவர். படிப்பறிவே இல்லாதவர். வேட்டை ஆடுவதும், உயிர் கொலை புரிவதும் தான் அவர் தொழில்.

ஆனாலும் கண்ணப்பனை இறைவன் ஆட் கொண்டவிதம் மிக அருமையானது. இதைப்பற்றி மாணிக்கவாசகர் சொல்கிறார்,

பாடல்

**கண்ணப்பன் ஒப்பதோர்**
**அன்பின்மை கண்டபின்**
**என்னப்பன் என்னொப்பில்**
**என்னையும் ஆட் கொண்டருளி**
**வண்ணப் பணித்தென்னை**
**வாவென்ற வான்கருணைச்**
**சுண்ணப்பொன் நீற்றற்கே**
**சென்றூதாய் கோத்தும்பீ**

"அந்த கண்ணப்பன் மாதிரி என்னால் அன்பு செய்ய முடியாமல் இருந்தும், என்னையும் நீ ஆண்டு கொண்டாயே, உன் கருணையை என்ன என்று சொல்வேன்" என்று உருகுகிறார்.

**இன்று பல கோவில்களில் பணவசதி, பதவி, அதிகாரம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து மேற்கண்டவை உள்ளவர்களை விழுந்து விழுந்து உபசரிப்பதைப் பார்த்திருப்போம்,**

இதுபோன்றவற்றை இறைவன் எப்போதும் ஏற்பதில்லை.

இலவச தரிசனத்தில் மனமுருகி பக்தி சிரத்தை யோடு இறைவன்மீது அன்பை மட்டும் செலுத்தி தரிசிக்க சென்றால் போதும், மற்றவற்றை புறந்தள்ளிவைத்துவிட்டு இறைவனின் கருணைப் பார்வை அன்புடையவர்மீது விழும்.

நோயாளி மருந்தை சாப்பிடும்போது உணவு விஷயத்திலும் கட்டுப்பாடு வேண்டும், அதுபோல இறைவனை அடைய நினைத்தால் மனதளவில் ஆடம்பரம், அகம்பாவத்தை அவசியம் கட்டுப்படுத்த வேண்டும்.

# எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

ஆன்மிகமலர்

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

**பெற 9444228203**

GMail இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

www.aanmeegamalar.com

# 16 புண்ணிய தீர்த்தங்கள் கொண்ட

# திருக்கழுக்குன்றம்

புகழ்பெற்ற திருக்கழுக்குன்றத்தில் மொத்தம் 16 புண்ணிய தீர்த்தங்கள் இருந்திருக் கின்றது. அவைகள் எங்கு எங்கு எந்த நிலையில் உள்ளது என பார்க்கலாம்.

## 1.சங்கு தீர்த்தம்

உலகப்புகழ் பெற்ற சங்குதீர்த்த குளம் சுமார் 13 ஏக்கர் பரப்பளவு கொண்டது. வழக்கமாக கடல்நீரில் பிறப்பதாக சொல்லப்படும் சங்கு இங்கு நன்னீரில் பிறப்பது சிறப்பு. 12 ஆண்டு களுக்கு ஒரு முறை இங்கு சங்கு பிறக்கும். அதனாலேயே இதனை சங்கு தீர்த்தம் என அழைக்கின்றனர். கடந்த 01.09.2011 அன்று இத்திருக்குளத்தில் சங்கு பிறந்தது. ஒரு மண்டலம் 48 நாட்கள் குளித்து மலைவலம் வந்தால் சித்தபிரமை தீரும் என்பது உண்மை. நோய் தீர்க்கும் தீர்த்தம் என்பது சிறப்பாகும். கங்கா நதி. காவிரி நதி. சரஸ்வதி நதி. வைதாளி நதி. கோமகி நதி. பொன்முகி நதி. தெனகுமரி நதி. தேவிகை நதி. கம்பை நதி போன்ற அனைத்து நதிகளிடமும் சிவபெருமான கூறியதாவது:

"காணினும் கைதொடினும் அள்ளித்தெளிப் பினும் உட்கொளினும்; கணப்பொழுதுமுழ்கினும் கால் வழுக்கி வீழினும் பாணிவிரி திரையின் ஒரு பனித்திவலை படினும் படரும் காற்றனுகினும் மெய்ப்பாதகம் குடிபோம் சேலைகு தொழுமிந்த தடந்தோறும் நீர் முகந்து செலும் அடியோர் அயமேகத்திற நகராம. விரதம் பூனுமவர் படிந் தியற்றில் அனந்தமெனப்பலிக்கும் புராரி என்றும் தீர்த்தம் என்றும் இரண்டில்லை இப்புரிக்கே" என கூறியுள்ளார்.

குரு பகவான் கன்னிராசிக்கு பிரவேசிக்கும் காலம் புஷ்கர மேளா நடைபெறும். அதுசமயம் இந்த குளத்தில் நீராடுதல் சிறப்பாகும். அன்று மாலை நடைபெறும் லட்ச தீப பெருவிழா காண கண்கோடி வேண்டும்.

## 2. ருத்ர தீர்த்தம்

இங்கு சங்கு தீர்த்த குளத்திற்கு தெற்கு பகுதியில் ருத்ராங்கோயில் அருகில் அமைந்துள்ளது. இங்குள்ள சிவனை தேவகணங்கள். முனிவர்கள். வழிபட்ட திருக்கோயில் இது. ஏழு மங்கையரும். முருகக்கடவுளும். வசிஷ்டர் விசுவாமித்திரர் அகத்தியர் ஜனக முனிவர் அகலிகை முதலியோர் தவம் செய்து அவரவர் வேண்டுதல் நிறைவேற்றியதாக ஐதிகம். ருத்ரர்கள் இறைவனை வேண்டி இத்தலத்திற்கு ருத்ர தீர்த்தம் எனவும். இத்தலம் ருத்ராங்கோயில் எனவும். இங்குள்ள சிவன் ருத்ர கோடீஸ்வரர் எனவும் வழங்க வேண்டி அதன்படியே இத்தலம் வழங்கப்படுகின்றது.

## 3.வசிஷ்ட தீர்த்தம்

இது ருத்திரான்கோயிலில் உள்ள ஒசூரம்மன் கோயிலுக்கு பின்புறம் அமைந்துள்ளது. இங்கு வசிஷ்டர் பல வேள்விகள் செய்து சிவனருள் பெற்றதால் இதற்கு வசிஷ்ட தீர்த்தம் என பெயர் உண்டாயிற்று. இங்குள்ள அம்மனை வெள்ளிக்கிழமம் விரதம் இருந்து வழிபட்டால் வேண்டுதல் நிறைவேறும். இக்குளத்தில் மூழ்கி சிவனை வசிஷ்டர் வேண்டியதாக வரலாறு உண்டு. அம்மன் அருளாளல் குழந்தை பாக்கியம்




சங்கு தீர்த்தம்

www.aanmeegamalar.com


www.aanmeegamalar.com

ருத்ர தீர்த்தம்



வசிஷ்ட தீர்த்தம்



அகத்திய தீர்த்தம்

இல்லாவர்களுக்கு குழந்தை பெற்ற தாக சொல்வ துண்டு.

### 4. அகத்திய தீர்த்தம்

இந்த குளம் கருங்குழி போகும் வழியில் வெள்ளாழ தெரு முனையில்அமைந்துள்ளது.இங்கு அகத்தியர் தவம் செய்ததால் இது அகஸ்தியர் தீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது. சுந்தர மூர்த்தி நாயனார் கழுக்குன்ற ஈசனை பூஜிக்க வந்தபோது இக்குளத்தில நீராடி எழுந்த போது சிவ காட்சி பெற்று பொன்பெற்றார் அத்தகைய சிறப்பு வாய்ந்தது இந்த தீர்த்தம். அதன் காரணமாக இன்றும் சித்திரை திருவிழா நடைபெறும் நான்காம் நாள் திருவிழா உற்சவத் தில் இறைவன் தெற்கு வாசல் வழியாகவந்து தீர்த்தத்தின் அருகில் மண்டபத்தில் வைத்து சுந்தரருக்கு பொற்றாளம் அளிக்கும் போது இறைவனிடம் உபதேசம் பெறுகிறார்.



வேலன்

### 5. மார்க்கண்டேய தீர்த்தம்

அகத்திய தீர்த்தத்திற்கு வடக்கு. தாழக்கோயி லுக்கு தென்மேற்கிலும் வயல்வெளிக்கு நடுவில் அமைந்துள்ளது. அருகிலேயே ஆலமரமும் அம்மன்கோயிலும் உள்ளது. மார்க்கண்டேய முனிவர் இறைவனை வணங்கி அருள்பெற்ற இடம். எனவே இது மார்க்கண்டேய தீர்த்தம் என அழைக்கப்படுகின்றது.

### 6.ஞான தீர்த்தம்

இந்த தீர்த்தம் மார்க்கண்டேய தீர்த்தத்திற்கு வடக்கு புறத்தில் அமைந்துள்ளது. ஆனால் அங்கு சென்று பார்த்தால் குளத்தினை காணவில்லை. குளத்தின் அருகே மண்டபமும் வினாயகர் கோயிலும்.ஆலமரமும் உள்ளதாக சொன்னார்கள். தேடிக்கொண்டிருக்கின்றோம்.

### 7.கௌசிக தீர்த்தம்

இது மலைக்கு வட மேற்கில் அமைந்துள்ளது.கொளசிக முனிவர் இதில நீராடி சிவனை வழிபட்டதால் இவர் பெயரே இக்குளத்திற்கு அமைந்துள்ளது. பேச்சு வழக்கில் ஆண்டரசன் குளம் ஆண்டர்சன்குளம் என்றும் அழைக்கப்படு கின்றது. இது வன்னிய தெரு முடிவில் உள்ளது.

### 8.அகலிகை தீர்த்தம்

அகலிகை வேதமலை ஈசனை வணங்கிடவும் அவள் பாவ விமோ சனம் பெற்று நலம் அடைந் திடவும் தேவர்களும் முனிவர்களும் தொழுதிடும் கழுக்குன்ற ஈசனிடம் வந்தபோது இந்த குளத்தில் நீராடி சிவனை வழிபட்டதால் இது அகலிகை தீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது. தற்காலத்தில இது வெள்ளை குளம் என்று அழைக்கப்படுகின்றது.

### 9.வருண தீர்த்தம்

மலை வலம் வரும் சமயம் நவகிரக கோயி லுக்கு பின்புறம் இந்த தீர்த்தம் உள்ளது. வருண பகவான் இக்குளத்தில் நீராடி பின்னர் இறைவனை வழிபட்டதால் வருண தீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது. இதன் அருகிலேயே கோடி வினாயர் ஆலயம் உள்ளதால் கோடிவினாயர் தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகின்றது.

### 10. சுந்தர தீர்ததம்

நால்வர்கோயில் பேட்டை தேவஸ்தானத்திற்கு சொந்தமான பயணிகள் விடுதி அருகில் உள்ளது. சுந்தரர் இங்குள்ள குளத்தில் நீராடி இறைவனை வேண்டியதால் இது சுந்தர தீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது.

### 11.இந்திர தீர்த்தம்

இது நால்வர் கோயில் பேட்டையில் நால்வர்



மார்க்கண்டேய தீர்த்தம்



கௌசிக தீர்த்தம்



அகலிகை தீர்த்தம்

www.aanmeegamalar.com


வருண தீர்த்தம்


சுந்தர தீர்த்தம்


இந்திர தீர்த்தம்

www.aanmeegamalar.com

கோயில அருகில் உள்ளது. அப்பர் சுவாமிகள் இக்குளத்தில் நீராடி இறைவனை வழிபட்டதாக பதிகம் உள்ளது. இறைவனடிகளார்கள் இறை வனை வழிபட இக்குளத்தில்; தினம் நீராடி இறைவனடி சேர்ந்ததால் இது இந்திர தீர்த்தம் என அழைக்கப்படுகின்றது.

### 12. சம்பு தீர்த்தம்

இந்த தீரத்தம் மாமல்லபுரம் சாலையில் கொத்திமங்கலத்தில் அமைந்துள்ளது. இதன் கரையில ஆலமரமும். முனிஸ்வரா் ஆலயம் உள்ளது. சம்பாதி மற்றும் சடாயு போன்ற பல முனிவா்கள் இக்குளத்தில் மூழ்கி சிவனை வழிபட்டு முக்தி அடைந்தார்கள். அதனாலேயே இது சம்பு தீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது.

### 13. லட்சுமி தீர்த்தம்

ஒரு முறை சிவனை காண திருமால் கயிலாயம் சென்றபோது வேதமலை (திருக்கழுக்குன்றம்) வந்து என் திருக்காட்சியை காண்பாயாக என அழைத்தார் அதன்படியே திருமால் இங்கு வந்து லட்சுமி சமேதராக இக்குளத்தில நீராடி இறைவனை வழிபட்டார். அப்போது திருமாலிடம் லட்சுமி தேவி இக்குளத்திற்கு என்ன பெயர் என வினவினார். சகல சம்பத்துக்களும் தரும் நீயே இங்கு நீராடியதால் இது லட்சுமி தீர்த்தம் என வழக்கட்டும் என்றும் இக்குளத்தில் நீராடி இறைவனை வழிபடுபவர்கள் வாழ்வில லட்சுமி கடாச்சம் கிட்டும் என வரம் வழங்கினார்.

### 14.நந்தி தீர்த்தம்

இறைவனை நந்தி இந்த குளத்தில் நீராடி வழிபட்டு இறையடி சேர்ந்ததால் இது நந்தி தீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது. இது தாழகோயில் உள்புறம்அமைந்துள்ளது.

### 15.பட்சி தீர்த்தம்

வேதமலை மீது பட்சி உணவருந்தும் பாறைக்கு அருகில் இந்த தீர்த்தம் உள்ளது. இரண்டு பாறைகளுக்கு இடையே இந்த தீர்த்தம் உள்ளது. கடுமையான வறட்சியிலும் இக்குளத்தில் உள்ள நீர்வற்றியது இல்லை. கடும் பிணிஉள்ள நாய் குளத்தில் விழுந்து பிணி நீங்கி சென்றதாக வரலாறு உண்டு. பட்சிகள் நீராடுவதால் இது பட்சி தீர்த்தம் என அழைக்கப்படுகின்றது.

திருக்கழுக்குன்றத்தில் மொத்தம் 16 தீர்த்தங்கள் உள்ளதாக சொல்கின்றார்கள். மதுளம் குப்பத்தில் ஒரு குளம் உள்ள தாக சொல்கின்றார்கள். அதுபற்றிய விவரம் தெரியவில்லை. அதுபோல மலை மேலே நரிக்குளம் உள்ளது. அது தீர்த்தங்கள் வரிசையில் வருமா என தெரியவில்லை. காணமல் சென்ற குளங்களை தேடிக்கொண்டிருக்கின்றோம்.

**– வேலன், போன்: 9894836096**
**திருக்கழுக்குன்றம்.**


பட்சி தீர்த்தம்


நந்தி தீர்த்தம்


சம்பு தீர்த்தம்


லட்சுமி தீர்த்தம்

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# வெள்ளை பூவை மங்களமாக ஏற்கும் அம்மன்




பொதுவாக அம்மன் கோவில்களில்சிவப்பு நிறத்திற்குத்தான் முக்கியத்துவம் தந்து பார்த்திருப்போம், சிவப்பு என்பதுதான் மங்களமான பொருளாக இருக்கிறது, அம்ம னிடம் ஏதாவது நல்ல காரியம் நடைபெற வேண்டுமென்றால் பூக்கட்டி கேட்கும் நிகழ்ச்சி நடக்கும்.

அதாவது வெள்ளை நிற பூவையும், சிவப்பு நிற பூவையும் காகிதத்தில் கட்டி அம்மன் காலடி யில் வைத்து எடுப்பர். சிவப்பு பூ வந்தால் நினைத்த காரியம் வெற்றியாகவும் மங்கலமாகவும் முடியும் என்பது மக்கள் நம்பிக்கை.

ஆனால் தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டியில் அமைந்துள்ள அம்மன் கோவிலில் வெள் ளை நிறம் வந்தால் மங்களம் என்று நம்புகின்றனர். வெள்ளிக்கிழமை களில் இக்கோவில் களில் பூக்கட்டி உத்தரவு கேட்க ஏராளமானோர் வருகின்றனர்.

சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டிப்பட்டி முட்புதராக இருந்தது. இங்கு பேரிநாயக்கர் என்ற முதியவர் ஒருவர் வசித்து வந்தார். அப்போது அவரது கனவில் தோன்றிய காளிதேவி “கேரளாவில் சோட்டாணிக் கரையிலிருந்து ஆற்றில் அடித்துவரப்பட்ட என் சிலை, வடமலை நாயக்கன் பட்டியில் வைகை ஆற்று மணலில் பதினாறு அடி ஆழத்தில் புதைந்திருக்கிறது. அதை எடுத்து வந்து ஆலயம் கட்டி வழிபாடு செய்யுங்கள்’’ என்று கூறியுள்ளார்.


புனிதவேல்

அதன்படி அந்த முதியவரும், ஊர் மக்களும் சேர்ந்து பள்ளம்தோண்டிப்பார்த்த போது அம்மன் சிலை கிடைத்துள்ளது. அந்தசிலையை எடுத்து கோவில் ஒன்றைக் கட்டி வழிபாடு செய்தனர்.

‘காளி’ என்று அம்மனுக்கு பெயர், சுற்று வட்டாரத்தில் உள்ள ஊர்க்காவல் தெய்வங்களுக்கு திருவிழா நடைபெறுவதற்கு முன் இக்கோவிலில் பூஜை செய்துவிட்டுத்தான் திருவிழாக்களை நடத்து கின்றனர்.

இக்கோயிலில் பூக்கட்டி உத்தரவு கேட்கும் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

இந்த அம்மனை கேரளத்து அம்மன் என்றும் போற்றி வழிபடுகின்றனர். சோட்டானிக்கரை அம்மனுக்கு இணையாக இந்த கோவிலை பக்தர்கள் வழிபடுகின்றனர்.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572

www.aanmeegamalar.com

# இயற்கை மருத்துவம்

பன நுங்கை மேல் தோல் உரிக்காமல் சாப்பிட்டு வர சீதபேதி குணமாகும்.

காரட், பீட்ரூட் சாப்பிடுவதால் மஞ்சள் காமாலையை தவிர்க்கலாம்.

❖ ❖ ❖

மிளகுடன் பொரிகடலை சேர்த்து பொடியாக்கி சாப்பிட்டால் வரட்டு இருமல் குணமாகும்.

வாழைப்பூவை சமையலில் வாரம் ஒருமுறை சேர்த்து வர வயிற்றுப்புண் குணமாகும்.

❖ ❖ ❖

கானா வாழை, வேர், தண்டு, இலை இவைகளுடன் அருகம்புல் சம்மாக சேர்த்து அரைத்து கொட்டை பாக்கு அளவு எடுத்து பாலில் கலந்து கொடுக்க இரத்த பேதி குணமாகும்.

❖ ❖ ❖

உடலில் கெட்ட நீர் உள்ளவர்கள் தினசரி ப்பாளிக்காய் சாப்பிட வேண்டும்.

கீழாநெல்லி செடியை கழுவி சுத்தம் செய்து அப்படியே மைய அரைத்து மோருடன் கலந்து சாப்பிட்டு வர மஞ்சள் காமாலை இரண்டு நாளில் குணமாகும்.

❖ ❖ ❖

வெற்றிலையுடன் சிறிது ஓமத்தை சேர்த்து அரைத்து அதனுடன் ஒரு ஸ்பூன் தேன் கலந்து குடிக்க வயிற்றுப்போக்கு உடனே நிற்கும்.

❖ ❖ ❖

வெங்காயச்சாறு, இஞ்சி ரசம், முருங்கைப்பட்டை சாறு தனித்தோ சேர்த்தோ தினமும் சாப்பிட ஆஸ்துமா கட்டுப்படும்.

ஆடாதொடை இலையை தேங்காய் எண்ணெய் விட்டு வதக்கி உத்தடம் கொடுக்க கழுத்துப்பிடிப்பு குணமாகும்.

❖ ❖ ❖


ஆன்மிகமலர்




ஆன்மிக விஷயங்களின் முழு வீடியோ

aanmeegamalar

YouTube

யூ–டியூப் சேனலில் பதிவிடப்பட்டுள்ளோம். நமது சேனலில் சென்று முழுவதுமாக பார்த்து பயன் பெறுங்கள்...

ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை

Subscribe

like & share

# ஆதி குரு அவதூத ஸ்ரீ தத்தாத்ரேயர்




சப்த ரிஷிகளில் மிக ச்ரேஷ்டரான அத்ரி மகரிஷிக்கும் பதிவ்ரதா சிரோன்மணியான அனுஸுயா மாதாவிற்கு மும்மூர்த்திகளின் அம்சமாக பிறந்தவர் ஸ்ரீ தத்தாத்ரேயர். அத்ரி அனுசுயா ஸத்புத்ரனை வேண்டி தவமிருக்க, அவரின் தவத்தில் மகிழ்ந்த இறைவன் "நானே என்னை கொடுக்கிறேன்'' என்ற வாக்கியத்தின்படி 'தத்தாத்ரேயராக' அவதரித்தார். எப்படி அதிதிகஸ்யபர் தம்பதியருக்கு வாமனராய், கர்தமர்தேவஹூதி தம்பதியருக்கு ஸ்ரீ கபிலராய் தோன்றி அனுகிரஹித்தாரோ அதேபோல் அத்ரி அனுசுயா தமபதிக்கு மும் மூர்த்திகளின் அம்சமாய் ஸ்ரீ தத்தாத்ரேயராய் தோன்றி அனுகிரஹித்தார்.

மார்கதரிசனம் குரு க்ருபையின்றி கிடைப்பதில்லை. குரு தத்தாத்ரேயர் ஒருவர்தான் மார்கதரிசனம் செய்விப்பவர். ஆகையினால் இவரது பிறப்பு மார்கழி (மார்க்க சீர்ஷ ) மாதத்தில் உண்டாயிற்று.

குரு பரம்பரை என்பது ஸ்ரீ தத்தாத்ரேயரிடம் இருந்துதான் ஆரம்பம்.

ப்ரஹ்மதேவனின் அம்சமான சந்திரன், விஷ்ணுவின் அம்சமான தத்தாத்ரேயன், சிவனின் அம்சமான துர்வாசன் என்று தங்களின் மூன்று அம்ச சக்திகளை அனுசூயாவிடம் அளித்தனர். இவர்களில் சந்திரனும், துர்வாசரும் தாயை நமஸ்கரித்து தவத்திற்கு செல்ல அனுமதி கோரினர். துர்வாசர் ரிஷி ஆனதால் தீர்த்த யாத்திரை செய்து தவம் செய்யவும், சந்திரன் தன்னுடைய லோகம் சென்று தன் தாயின் பாதங்களை தரிசித்து கொண்டிருக்கவும் விடை பெற்று சென்றனர்.

மூன்றாவது புத்திரன் விஷ்ணு மூர்த்தியான ஸ்ரீ தத்தாத்ரேயர் அவர்களுடன் தங்கினார். "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்ற வாக்கின்படி மூன்றுபேரும் சேர்ந்த தத்த மூர்த்தி குரு பீடத்திற்கு மூல புருஷராக விளங்கினார்.

குரு பரம்பரை என்பது ஸ்ரீ தத்தாத்ரேயரிடம் இருந்துதான் ஆரம்பம்.

தத்தாத்ரேய வழிபாடு மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவில் மிக மிக அதிகம். அதற்குக் காரணம் இந்த இரண்டு மாநிலங்களில் மட்டுமே தத்தாத்திரேய அவதாரங்களாக பல மகான்கள் இருந்துள்ளார்கள் என்பதே.

ஸ்ரீமன் நாராயணனின் 24 ரூபங்களில் ஸ்ரீ தத்தாத்ரேயரும் ஒருவர். இவர் ஒரு அவதூதர். ஸ்ரீ விஷ்ணுவின் ஆறாவது அவதாரம் (1.3.11) ஸ்ரீ தத்த அவதாரம் என்று பாகவதம் குறிப்பிடுகிறது. ஸ்ரீ விஷ்ணு குருவாகி அருள் புரிந்த ஓர் உன்னத அவதாரம் ஸ்ரீ தத்தாத்ரேயர் அவதாரம்.

த்ரிபுரா ரஹஸ்யம், அவதூத கீதை, தர்சனோபநிஷத், அவதூதோபநிஷத் இவரை பற்றி மிக விரிவாக விளக்குகின்றது. மார்க்கண்டேய புராணமும், ஸ்ரீ மத் பாகவதமும் இவரின் மகிமைகளை எடுத்தியம்புகிறது. ஸ்ரீமத் பாகவதத்தில் (117,8,9) யயாதியின் புதல்வரான யதுவிற்கும் ஓர் அவதூதர்க்கும் (ஸ்ரீ தத்தர்) நடக்கும் சம்பாஷணைகள் 'யது வாத சம்வாதம்' என்று அழைக்கப்படுகிறது.

ஸ்ரீ தத்தர் நித்யம் ஸந்நிஹிதோ ஹரி: என்ற

www.aanmeegamalar.com

கூற்றுக்கிணங்க அருகில் இருந்து காட்சி தந்து அனுகிரஹிப்பவர். ஆனால் நம்மால் அவரின் மாயையை புரிந்து கொண்டு அவரின் முழு கடாக்ஷத்தை பெறுவது மிகவும் கடினம்.

தத்தரின் பாத தூளியிலிருந்து யதுவும், கார்த்தவீர்யார்ஜுனனும் தோன்றினார்.

**ஸ்ரீ தத்தரின் தோற்றம்**

அவதூதர். கௌபீனம் அணிந்து சாம்பலை உடலில் பூசி கொண்டு ஏகாந்த ஸ்வரூபியாக, முற்றிலும் பற்றற்றவர். எப்பொழுது எங்கு இருப்பார் எங்கு செல்வார் என்று அனைவராலும் அறியப்பட முடிய யோக மாயா ஸ்வரூபி ஸ்ரீ தத்தாத்ரேயர். பசு, நான்கு நாய்கள் புடைசூழ, கரங்களில் திரிசூலம், சங்கு சக்கர ஸ்வரூபியாய், சாம்பல் பூசிய தேகத்துடன், பிட்சை பாத்திரம் ஏந்தி, ஜெபமாலையுடன் அபார தேஜஸுடன் விளங்கு வார்.

**பசு/காமதேனு** கேட்பவற்றை அள்ளித்தரும் காமதேனுவாக பக்தர்களின் மனோபீஷ்டங்களை பூர்த்தி செய்பவர். தர்ம ரூபம்.

**நான்குநாய்கள்** நான்கு வேதங்களை குறிக்கும்.

**திரிசூலம்** அறியாமை, அகந்தையை அழிப் பதை குறிக்கும்.

**சுதர்சன சக்கரம்** முக்காலமும் அறிந்தவர். ஆதியும் அந்தமும் இல்லாத விஷ்ணு ஸ்வரூபம் என்பதை உணர்த்தும்.

**சங்கு** உறங்கும் ஆத்மாவை பிரணவ ஒலி யாகிய ஓம்காரதத்துடன் தட்டி எழுப்பும்.

**சாம்பல்** செல்வம், ஆடம்பரம், அகந்தை, புகழ், ஆணவம் அனைத்தும் ஒருநாள் அழியும் நிலை யற்ற தன்மையுடையவை என்பதை உணர்த்தும்.

**பிட்சைபாத்திரம்** தனக்கென்று ஏதும் சேர்க் காமல் இருப்பதை பகிர்ந்துண்டு உண்ண வேண் டும் என்பதை உணர்த்தும்.

**ஜெபமாலை** நித்யம் பகவானின் நாம ஜெபத் தில் ஈடுபட வேண்டும் என்பதை உணர்த்தும்.

ஸ்ரீ தத்தர் கலியுகத்தில் எடுத்த அவதாரங்கள் ஐந்து: 1. ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் 2. ஸ்ரீ நரசிம்ஹ ஸரஸ்வதி 3. ஸ்ரீ சுவாமி சமர்த்தர் (எ) அக்கல் கோட் மஹராஜ் 4. ஸ்ரீ மாணிக் பிரபு மஹராஜ் 5. ஸ்ரீ ஷீர்டி சாய் பாபா

'தேம்பே ஸ்வாமி' என்று அழைக்கப்படும் 'ஸ்ரீ வாசுதேவானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள்' 3,500 ஸ்லோகங்கள் மற்றும் 64 அத்தியாயங்கள் கொண்ட ஸ்ரீ தத்த புராணம் படைத்தார்.

2,000 ஸ்லோகங்கள் அடங்கிய 'குரு சரித் திரம்' என்னும் நூலும் இவரின் முதல் இரண்டு அவதாரங்களான 'ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர்' மற்றும் 'ஸ்ரீ நரசிம்ஹ ஸரஸ்வதி' மகிமைகளை பற்றி விரி வாக பேசுகிறது.

ஸ்ரீ தத்தர் தனது யோகா மாயையால் 15 தத்வங்களாலான உலகை படைத்து தான் 16ஆவது தத்வமான புருஷனாக ஆனார்.

இவரின் லீலா விநோதங்களை அறிந்து கொள்வது மிக மிக கடினம் ஏனென்றால் முற்றிலும் மாய தோற்றத்துடன் வெவ்வேறு ரூபங்களில் தனது உண்மையான ஸ்வரூபத்தை மறைத்து மாய வடிவத்துடன் விளங்கும் குரு. பூர்வ ஜென்ம புண்ணிய குவியல் இருந்தால்தான் இவரை வழிபடும் பாக்கியம் நமக்கு கிடைக்கும்.

ஏகநாதர், ஸ்ரீ சமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகள், தத்தோத்பவா, அலர்கன், விஷ்ணு தத்தர், சத்ரு ஜித் மற்றும் பல பாகவதோத்தமர்கள் இவரின் தரிசனம் பெற்றனர்.

**ஸ்ரீ தத்தரின் 24 குரு மார்கள்:** பூமி, காற்று, ஆகாயம், நீர், நெருப்பு, சந்திரன், சூரியன், புறா, மலைப்பாம்பு, கடல், வீட்டில் பூச்சி, தேனீ, யானை, தும்பி, மான், மீன், பிங்கலை என்னும் வேசி, அன்னப்பறவை, பாலகன், குமாரி, வேடன், சர்ப்பம், சிலந்திப்பூச்சி, ஈ.

**சீடர்கள்:** இவர் ஸ்ரீ பரசுராமரின் தந்தை ஜமதக் னியின் குரு. இவர்தான் ஸ்ரீ பரசுராமருக்கு சாக்த வழிபாட் டின் தத்துவத்தை உபதேசித்த குரு என்று திரிபுர ரஹஸ்யத்தின் 'மஹாத்ம்ய ஜ்ஞான கண்டங்கள் விளக்குகின்றன. இதன் அடிப்படையில் பரசுராமர் கல்ப சூத்திரங்களை தொகுத்து ஸ்ரீ வித்யா பூஜைக்கான முதல் விளக்க நூலை படைத்தார்.

ஆறாவது சாக்ஷுஷ மன்வந்த்ரத்தில் தோன் றிய ப்ரஹ்லாதருக்கு குருவாக இருந்து ‘ஆத்ம தத்வத்தை’ உபதேசித்தார். க்ருத வீர்யனின் புதல்வனான 27 ஆவது சதுர்யுகத்தில் தோன்றிய கார்த்தவீர்யார்ஜுனனுக்கு ‘அஷ்டாங்க யோகத்தை’ உபதேசித்தார்.

இவரின் அனுகிரஹத்தால்தான் ஸ்ரீஆதிசங்கரர் கைலாசத்தில் இருந்து யோகமார்க்கத்தில் சென்று ஈசனிடம் பஞ்ச லிங்ககளைப்பெற்று 'சௌந்தர்ய லஹரி' பெற்றார் என 'ஸ்ரீ சங்கர விஜயம்' கூறுகிறது.

– மதுரை சு. ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593

www.aanmeegamalar.com

# வேதங்களுக்கு முன்பு தோன்றிய இந்து மதம்

எந்த ஒரு மனிதனை பார்த்தாலும் அவனைப் பற்றி உடனடியாக நமக்குள் எழும்பும் கேள்வி இவன் வயது என்னவாக இருக்கும் என்பதுதான். சாதாரணமான மனிதனின் வயதையே அறிந்து கொள்ளும் ஆர்வம் வரும் போது மதங்கள் போன்ற பெரிய பெரிய விஷயங்களை அறிந்து கொள்ளும் பொழுது இது எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கும் என்ற சிந்தனை வருவது தவிர்க்க முடியாததே ஆகும்.

5,000 வருடங்களுக்கு முன்பு பாரசீகத்தில் தோன்றிய ஸ்ராஸ்திய மதத்திலிருந்து யூதர்ஹீப்ரு மதம் தோன்றி அதிலிருந்து கிறிஸ்துவ மதம் தோன்றி கிறிஸ்துவத்தின் பெருவாரியான கொள்கைகளை சித்தாந்தங்களை உள்ளடக்கி இஸ்லாம் மதம் உருவாகி இன்று 1500 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இம்மதங்களுக்கு முன்னரே நமது இந்து மதம் தோன்றிவிட்டது. அதாவது ஸ்ராஸ்திய மதம் தோன்றுவதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நமது மதம் உருவாகிவிட்டது என்று சொல்லலாம்.

பொதுவாக இந்து மதத்தின் தோற்றத்தை வேத காலத்திலிருந்து ஆரம்பிப்பதுதான் நம்முடைய வழக்கமான மரபு. ஆனால் இந்து மதம் உண்மையில் வேதகாலத்தில் தான் தோன்றியதா அல்லது அதற்கு முன்னரே தோன்றிவிட்டதா என்று நம்மை போன்ற சாதாரண மனிதர்கள் சிந்திப்பது இல்லை. காரணம் நமக்கு வேத காலம் என்பதே எத்தனை வருடங்களுக்கு முற்பட்டது என்பது சரிவர தெரியாத போது அதற்கு முன்பே உள்ள காலத்தை எப்படி கணித்து பார்க்க முடியும். அப்படி முடியாது என்பதினால் காலங்களை அறிந்து கொள்ளும் நமது ஆர்வத்தையும் முயற்சி களையும் கைவிட்டு விடமுடியுமா எனவே வேதகாலத்திற்கு முற்பட்ட காலத்தை அறிந்து கொள்ள நம்மால் முடிந்தவரை முயற்சி செய்து பார்ப்போம். அப்படி பார்த்தால் தான் இந்து மதத்தின் தொன்மையை நாம் உணர முடியும்.

புவியியல் அறிஞர்கள் உலகத்தில் மனித இனம் தோன்றியது தென்னிந்தியாவில் தான் என்று சொல்கிறார்கள். இவர்களின் இந்த கூற்றுக்கு சில யூகங்கள் மட்டுமே ஆதாரமாக இருக்கிறதே தவிர அறிவியல் சார்ந்த அசைக்க முடியாத சான்றுகள் எதுவும் இது வரை கிடைக்கவில்லை இருந்தாலும் கூட நமது இந்திய நாட்டை பொறுத்த வரையில் மனித இனம் தோன்றியது தெற்கில் தான் என்பதற்கு அசைக்க முடியாத ஆதாரங்கள் நமக்கு கிடைத்து உள்ளன.

பல கோடி ஆண்டுகள் வயதுடைய முதுமையான கற்பாறை படிவுகள் தென்னிந்தியாவில் காணப் படுகிறது. அப்பாறை படிவுகள் இருக்கும் பகுதிகள் காடுகளும் மலைகளும் சார்ந்த பகுதிகளாக இருப்பதினால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இப்பகுதியில் மனித சமூகம் வாழ்ந் திருக்க வேண்டும். எப்படி யென்றால் இங்குதான்



www.aanmeegamalar.com

அதிக சிரமப்படாமல் மனிதர்கள் வேட்டையாடி மிருகங்களைஉண வாக்கிக் கொள்ளவும் காய் கனி களை பெற்றுக் கொள்ளவும் வாய் பிருந்திருக்கிறது. மேலும் விந்திய மலை தொடருக்கு வடக்கே இன்று பரந்து கிடக்கும் கங்கை சமவெளியும் இமயமலை தொடரும் ஒரு காலத்தில் கடலுக்குள் மூழ்கி கிடந்திருக்கிறது.

இன்று கூட இமயமலை சிகரங்களின் உச்சியில் கடல்வாழ் உயிரனங்களின் படிமங்கள் படிந் திருப்பதை பார்க்கும் பொழுது இமயம் கடலுக்குள் தான் இருந்திருக்க வேண்டும் என்ற உறுதி ஏற்படுகிறது. வட இந்திய பகுதி கடலுக்குள் மூழ்கி கிடந்த காலத்தில் தென்னிந்தியா தான் உயரமாகவும் காடுகளும் மலைகளும் சூழ்ந்ததாகவும் இருந்திருக்க வேண் டும் அதனால்தான் மனித இனம் இந்தியாவை பொறுத்த வரை தெற்கில் தான் தோன்றியிறுக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். புவியியல் கணக்கு படி சுமார் ஐந்துகோடி ஆண்டுகளுக்கு முன்புதான் இமயமும், கங்கை சமவெளியும் கடலுக்குள்ளிருந்து வெளிவந்திருக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது.



யோகி ஸ்ரீ
ராமானந்த குரு

ஆக ஐந்து கோடி ஆண்டுகளுக்கு முன்பு கன்யாகுமரியிலிருந்து தெற்கே நெடுந் தொலைவிற்கு நிலப்பரப்புபரந்து கிடந்ததாகவும் அந்த பகுதிதான் லெமுரியா கண்டம் என்று ஒரு சில வல்லுநர்கள் கூறுகிறார்கள். முதன் முதலில் மக்களினம் லெமுரியா கண்டத்தில் தான் தோன்றியதாகவும் இன்று இலங்கையிலும் மேற்கிந்திய தீவுகளிலும் தென்னிந்தியாவில் வாழக்கூடிய மக்கள் அந்த ஆதிமனிதர் களின் வாரிசுகள் என்று கருதப்படுகிறது. அப்படி கருதுவதற்கு காரணமும் இருக்கிறது. இந்த பகுதிகளின் நில அமைப்பு வாழும் மக்களின் உடலமைப்பு தோலின் நிறம் ஆகியவைகள் ஏறக்குறைய ஒரே மாதிரியாக காணப்படுகிறது. இதுமட்டுமல்ல நியுஜிலாந்தில் வாழும் மேவா என்ற ஆதிமக்களின் மொழியமைப்பில் தமிழ்சொற்கள் பல இருக்கின்றன. மேலும் மேற்கிந்திய தீவு மக்களின் சில பழக்க வழக்கங்களும் வழிபாட்டு முறைகளும் சின்னங்களும் சற்றேரக்குறைய தமிழ் மரபோடு ஒத்து அமைந்திருக்கிறது.

போர்னியாவில் உள்ள ஆதி குடிமக்களான டயாப்புகளும் நமது ஆனைமலை பகுதியில் வாழும் காடர்கள் என்ற மலை சாதியினரும் ஒரே மாதிரியான வகையில் மரம் ஏறும் பழக்கத்தை கொண்டுள்ளனர். இது தவிர தென்னாப்பிரிக்காவில் உள்ள நீக்ரோக்களுக்கும் தமிழ்நாட்டு வனவாசிகளுக்கும் உருவத்திலும் நடை உடை பாவனையிலும் சமயச் சடங்குகளிலும் ஒற்றுமையிருப்பதை இன்றும் காணலாம். இலங்கை தமிழ் மக்களுக்கும் நமக்கும் உள்ள ஒருமைப் பாட்டை சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை.

இவைகளையெல்லாம் வைத்துப்பார்க்கும் பொழுது விந்திய மலைத் தொடங்கி ஆப்ரிக்கா வரையில் ஒரே நிலப்பரப்பாக இருந்திருக்க வேண்டும் என்பதை நம்பாமல் இருக்க முடியாது. நமது பழந்தமிழ் இலக்கியங்கள் மிகப்பெரும் கடல்கோள் ஒன்று ஏற்பட்டு தமிழ்நிலப் பகுதிகள் பலகூறுகளாக பிரிந்து போய்விட்டதாக பதிவு செய்து வைத்திருக்கிறது. இந்த கடல் கோளினால் லெமோரியா கண்டம் இந்திய நிலப்பகுதியிலிருந்து துண்டிக்கப்பட்டு விட்டது அல்லது அழிந்துபோய் விட்டது என்று சொன்னால் மிகையாகாது.

கடல் சீற்றத்தால் லெமோரியா கண்டம் அழிந்த பொழுதுதான் இமயமலையும் கங்கைச் சமவெளியும் நிலப்பரப்பிற்கு வந்திருக்கவேண்டும். இந்த காலகட்டத்தில் கடல் தாக்கத்திலிருந்து தப்பி பிழைத்த மக்கள் வடக்கு நோக்கி குடிபெயர்ந்திருக்க வேண்டும். அப்படி குடிபெயர்ந்து வாழ்ந்த மக்களின் நாகரீக சுவடுகள் தான் சிந்து சமவெளி நாகரீகம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். வரலாற்று அறிஞர்களை வியப்பிலும் திகப்பிலும் ஆழ்த்தக்கூடிய பல பொருட்கள் சிந்து சமவெளி பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிந்து வழி முழுவதும் பரவி இருந்த ஒரு பெரும் நாகரீகத்தின் சின்னங்களாக அவைகள் இன்று நமக்கு காட்சி தருகின்றன. மொகஞ்சதரோ, ஹராப்பா ஆகிய இரு புதை நகரங்களிலும் காணப்படும் கட்டடங்களின் அமைப்பும் நகரங் களின் வடிவமைப்பும் ஒரே மாதிரியாக இருக் கிறது. அந்த காலத்தில் மொகஞ்சதரோ வளமை யான நகரமாக விளங்கியதாகவும் பெரும் வெள்ளத்தினால் அந்நகரம் ஏழுமுறை தாக்கப்பட்டு

www.aanmeegamalar.com

மண்மூடிப் போனதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

மொகஞ்சதரோவிலும் ஹராப்பாவிலும்ஊருக்கு வெளியே கோட்டை கொத்தளங்கள் கட்டப்பட்டிருக்கின்றன அக்கோட்டைகள் மன்னர் களின் அரண்மனைகளாகவும் படைவீரர்களின் பாடிவீடுகளாகவும் பயிற்சி கூடங்களாகவும் இருந்திருக்க வேண்டும். அவைகளில் பெரிய பெரிய நீச்சல் குளங்களும் நேரான சாலைகளும், நெற்களஞ்சியங்களும் அமைக்கப்பட்டிருந்தன. மத குருமார்களுக்கு தனிதனி குடியிறுப்புகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அந்நகர மக்கள் அழகான மண்பாண்டங்களும் பொம்மைகளும் வெண்கல சிலைகளும் செய்ய கற்றிருந்திருக்கின்றனர்.




செப்பேடுகள் எழுதும் பழக்கமும் அவர்களிடம் இருந்திருக்கின்றனர். அவர்கள் பயன்படுத்திய நாணயங்களிலும் சில பட்டையங்களிலும் சில பாத்திரங்களிலும்இந்து கடவுள்களின் உருவங்கள் செதுக்கப்பட்ட முத்திரை கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சிந்து வழி எழுத்துக்களில் அடிக்கடி ஒரு குறி வருகிறது மூடியில்லாத மண்பாண்டத்தை போன்று அந்த குறி வரையப்பட்டுள்ளது. அது அரசமரத்தைகுறிப்பிடுவதாக சில அறிஞர்கள் குறிப்பாக ரஷ்யாவை சேர்ந்த ஆய்வு குழவினர் கூறுகிறார் கள். இது அரசமரத்தை காட்டும் குறியல்ல மரக்கலத்தை அதாவது படகை சுட்டிக் காட்டும் குறியென்று பின்லாந்து நாட்டை சேர்ந்த அறிஞர்கள் கருதுகிறார்கள். அந்த குறியீட்டை நாம் நேரடியாக பார்க்கும் பொழுது அரச மரத்தை காட்டும் குறியாகவே அது இருக்க வேண்டும் என்று தோன்றுகிறதே தவிர மரக்கலத்தை காட்டுவதாக தோன்றவில்லை.

சிந்து வழி நாகரீகத்தில் முன்னூறு வகையான எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது தெரிகிறது. அதில் ஒரு எழுத்துக்கு கூட இன்று வரை அர்த்தம் கண்டுபிடிக்கபடவில்லை இந்த எழுத்துகள் தவிர பல வித சித்திரங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்த சித்திரங்களில் பெருவாரியானவைகள் விலங்குகளும் ஆயுதங் களும் தெய்வங்களும் மனிதர்களும் ஆகும். அந்த விலங்கு சித்திரங்களை பார்ப்பவர்கள் வேதத்தில் குறிப்பிடும் யாகங்களில் பலியிடப்படும் விலங்குகளை காட்டுவதாக சொல்கிறார்கள். ஆனால் அந்த கூற்றில் உண்மை இருப்பதாக தெரியவில்லை.

காரணம் என்னவென்றால் யானைகளும் காண்டாமிருகங்களும் அந்த ஓவியங்களில் காட்டப்பட்டுள்ளன. எந்த சூழலிலும் இத்தகைய மிருகங்களை வேள்விகளில் பலியிடப்பட்டதாக வேதத்தில் எந்த குறிப்பும் கிடையாது எனவே இந்த முத்திரை சித்திரங்கள் நிச்சயமாக வேதங்களை சார்ந்தது அல்ல என்று துணிந்து கூறலாம். இது மட்டும் அல்ல இந்த சித்தரங் களில் வேதங்களில் குறிப்பிடப்படும் தெய்வ உருவங்கள் எதுவுமே வரையப் படவில்லை.

மேலும் அந்நகர சுவடுகளில் கிடைக்கும் எல்லாவகையான சமயச்சார்புடைய ஆதாரங்களை திரட்டி பார்க்கும் பொழுது சிந்துவெளி மக்களின் சமய வாழ்க்கைகும் வேதங்களில் குறிப்பிடப்படும் சமய வாழ்க்கைக்கும் தொடர்பு இருப்பதாக கருதமுடியாது. ஒன்று அந்த மக்கள் வேதம் சாராத வழிபாட்டை கொண்டவர்களாக இருக்க வேண்டும் அல்லது வேதகாலத்திற்கு முற்பட்ட சமயநெறியை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

ஆரியர்கள் இந்தியாவிற்குள் குடியேறி வந்ததாக ஒரு சாராரும் இல்லை அவர்களும் இந்நாட்டின் பூர்வ குடிகள் தான் என்று ஒரு சாராரும் முடிவே இல்லாமல் வாதாடி வருகிறார்கள். இன்னொரு சாரார் திராவிடர்கள் கூட இந்தியாவில் குடியேறியவர்களே தவிர பூர்வ குடிகள் அல்ல என்று கூறுகிறார்கள் எல்லோருமே தங்களது வாதங்களுக்கு வலுசேர்க்கும் ஆதாரங்களை தருகிறார்கள். அவற்றில் எது சரி எது தவறு என்ற முடிவிற்கு நம்மால் வரமுடியவில்லை காரணம் அனைவரின் தரப்பிலும் கொஞ்சமாவது உண்மையிறுப்பதை நம்மால் உணரமுடிகிறது.

வேதங்களுக்கு முன்பே இந்து மதம் இந்த நாட்டின் தாய் மதமாக இருந்திருக்கிறது. எதை வைத்து இந்த முடிவை நான் சொல்கிறேனென்றால் சிந்து சமவெளி மக்கள் பயன்படுத்திய கடவுள் உருவங்களில் பல வேதங்களில்குறிப்பிடப் படாத வைகள் இருக்கின்றன. அது மட்டுமல்லாது அந்த மக்களின் வழிபாட்டு முறைகள் பலவேதக்கருத்துகளுக்கு மாறுபாடுடையதாக இருந் திருக்கின்றது. அதற்கு பல ஆதாரங்களை நம்மால் கூறஇயலும்.


**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**

மேலும் தொடர்பு கொள்ளவும்

**போன்: 09442426434**


www.aanmeegamalar.com

# சரியான உபவாச முறை அறிந்து கொள்ளுங்கள்

குருதேவர் அருளுகிறார்: “உபவாசம் இருக்கும்பொழுது என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும். அதனால்தான் மூன்று நாட்களுக்கு மேற்பட்ட உபவாசத்திற்கு முறையான மேற்பார்வை தேவைப்படுகிறது. நான் எவருக்கும் அவரது முதல் உபவாசம் நீண்டதாக இருக்க வேண்டும் என்று அறிவுரை கூறுவதில்லை; ஏனெனில் அவர் பலவீனமடைந்து விடுவர். வாரத்திற்கு ஒரு நாள் பழம் அருந்தி உபவாசம் அல்லது ஒவ்வொரு மாதமும் ஆரஞ்சுப் பழரசம் அருந்தி மூன்று நாள் உபவாசம் என்பன ஒருவரை உபவாசமிருப்பதற்கு பழகிக்கொள்வதற்கான சிறந்த வழிகளாகும். உபவாசமிருப்பவர், உபவாசம் ஆரம்பித்த உடனேயே, தம்மீது அனுதாபம் கொண்டு உண்ணாவிடில் பலவீனமுற்று தாம் இறக்க நேரிடும் என்று கூறப்போகிறவர்களை எதிர்கொள்ள மனத்தளவில் தம்மை தயார் செய்துகொள்ளவேண்டும். நீண்ட நாள் உபவாசத்தின்போது, முதல் சில நாட்களில் நீங்கள் பலவீனமாக இருப்பதை உணரலாம் என்பது உண்மையே; ஏனென்றால் உயிர்ச் சக்தியானது உணவைச் சார்ந்து இருப்பதற்கு பழக்கப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் படிப்படியாக, நாட்கள் செல்லச்செல்ல, பலவீனம் என்பதையும் நீங்கள் உணரமாட்டீர்கள். உங்கள் உயிர்ச் சக்தியும், ஆன்மாவும் உணவுடன் உள்ள தொடர்பை இழக்கின்றன. உயிர்ச் சக்தி மட்டுமே உடலின் ஆதாரம் என்பதை நீங்கள் காண்பீர்கள்.”

மேலும் அவர் கூறுகிறார்: “ஒருவர் உபவாசமிருந்தாலும் எடையை இழக்காமலிருப்பதற்கான இரகசியத்தை





நான் அறிவேன். உயிர்ச்சக்தியானது ஒருவருடைய சுய உணர்வுடன்கூடிய கட்டுப்பாட்டில் உள்ள பொழுது, அவரது எடையை சிறிது குறைக்கவோ அல்லது வழக்கமான எடையை வைத்துக்கொள்வதற்கோ, அதைப் பயன்படுத்தலாம். இருவகைகளிலும் அது பயனளிக்கிறது. இந்த அடிப்படைக் கோட்பாட்டை உபயோகிக்கும்போது எவ்வளவு நீண்டகாலம் உபவாசமிருந் தாலும், தேகத்தின் சாதாரண வெப்ப அளவு குறையாது.

உயிர்ச் சக்தியானது இறைவனின் வாய் ஆகின்ற முகுளம் மூலம் சக்தியை உள்வாங்கி புற ஆதாரங்களின்மீது சார்ந்திருப்பதற்குப் பதிலாக, அதனுடைய உள்ளார்ந்த புத்துயிரூட்டும் சக்தியின்மீது மேன்மேலும் சார்ந்திருக்கத் தொடங்குகிறது. முக்கிய தேக செயல்பாடுகளுடன் ஜீவன், முழுமையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், மனிதர்கள் ஐயாயிரம் வருடங்கள் அல்லது எல்லையற்ற காலம் வரை புதைக்கப்பட்டு, அவர்கள் தொடர்ந்து உயிருடன் இருக்க முடியும். உயிர் என்றும் அழியாதது,. அது சுவாசத்தையோ, உணவு, நீர் அல்லது சூரிய ஒளியையோ சாராதது. நீங்கள் அழிவற்ற ஆன்மா என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். இதுதான் வாழ்வதற்கான வழி. நமது உணர்வுநிலை மரணத்திற்குப் பின்னம் வாழ்கிறது. ஆனால் சாதாரண மனிதன் அந்த தொடர்ந்திருக்கும் உணர்வை இழக்கிறான் அதனால்தான் இறந்து விட்டதாக நினைக்கிறான். நாம் ஒவ்வொருவரும் ஒரு நாள் இறக்கவே போகின்றோம். அதனால் மரணத்தைப்பற்றிப் பயப்படுவதில் ஒரு பயனுமில்லை. உறக்கத்தில் உங்கள் தேக உணர்வை இழக்கப்போவதை எதிர்பார்த்து நீங்கள் வருத்தமடைவதில்லை. உறக்கத்தை ஆவலுடன் எதிர்நோக்கும் ஒரு விடுதலை நிலையாக நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள்; அதேபோல்தான் மரணமும்; அது ஓர் ஓய்வு நிலை. இந்த வாழ்விலிருந்து கிடைக்கும் ஓர் ஓய்வூதியம் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. மரணம் வரும்போது அதைப்பார்த்துச் சிரியுங்கள். மரணம் என்பது நீங்கள் ஒரு பெரும் பாடத்தை, நீங்கள் இறக்க முடியாது என்பதைக் கற்றுக்கொள்வதற்காக ஏற்படும் ஓர் அனுபவமே. நீங்கள் இதை இப்பொழுதே கண்டறிய முடியுமானால், ஏன் மரணத்திற்காகக் காத்திருக்க வேண்டும்? நீங்கள் பயில வேண்டிய முதல் பாடம் என்னவெனில் உயிரானது உணவைச் சார்ந்திருக்க வில்லை என்பதே. இதை நீங்களே உங்களுக்கு உபவாசம் மூலம் நிரூபித்துக்கொள்ள முடியும்."

உபவாசத்தின் பின் உள்ள பரதத்துவ விஞ்ஞானம்

உபவாசத்தின் பின் ஒரு சிறந்த பரதத்துவ விஞ்ஞானம் உள்ளது. இரு விஷயங்கள் உங்களை பூவுலகுடன் பிணைத்துள்ளன: 'மூச்சு மற்றும் உணவு' இருப்பினும் உறங்கும்பொழுது மூச்சு அல்லது உணவு இவற்றில் யாதொன்றின் தேவையையும் அறியாது நிம்மதியாக உள்ளீர்கள் உங்கள் ஆன்மா தேக உணர்விலிருந்து விடுபட்டிருக்கிறது. உபவாசம் இதே முறையில் மனதை உயர்த்துகிறது. உபவாசம் மூலம் மனதை அதன் சொந்த சக்தியின்மீது சார்ந்திருக்கச் செய்யுங்கள். அந்த மனோ சக்தி இயங்கும்பொழுது முகுளத்தின் வழியாக நுழையும் உடலைச் சுற்றியுள்ள பிரபஞ் ச சக்தியிலிருந்து, மூளைக்குள்ளும் தண்டுவடத்திற்குள்ளும் தொடர்ந்து பாய்கின்ற சாசுவத சக்தியினால் உடலில் உள்ள உயிர் சக்தியானது இன்னும் அதிகமாக வலுவூட்டப்படுகிறது. உடலைத்தாங்கி ஆதரிக்கும் வெளிப்புற ஆதாரங்கள் மீதான சார்பிலிருந்து விடுபட்டு உயிர்சக்தியானது, தான் உள்ளிருந்து தாங்கப்படுவதை பார்க்கிறது. மேலும் இது

100
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

எவ்வாறு என்று வியப்புறுகிறது. பிறகு மனம் கூறுகிறது; "தேகம், தான் சார்ந்திருக்கப் பழக்கப்பட்டிருக்கும் திடப்பொருள்களானவை சக்தியின் செறிந்த உறைவுகளே தவிர வேறொன்றுமில்லை. நீ தூய சக்தியாவாய். மேலும் நீ தூய உணர்வு நிலை," பின்னர் மனம் எந்தக் கட்டளையைக்கொண்டு உயிர்ச்சக்தியின் உணர்வை தூண்டுவித்தாலும் அது அவ்வாறே வெளிப்படுகிறது."

"மனோசக்தியால் எதையும் செய்ய முடியும். ஆகவே உணவு இல்லாமல் நீங்கள் வாழ முடியாது என்று கூறுவது மனதிற்கும் உங்களுக்குள்ளே உள்ள சகல வல்லமை படைத்த உயிர் சக்திக்கும் இழைக்கப்படும் எத்தனை அநீதி என்பதை நீங்கள் காணலாம். உங்கள் வாழ்க்கையையும் உடலையும் வருத்தத்திற்கு இடம் கொடுக்காதபடி ஆக்கிக் கொள்ளுங்கள். உங்களையே வெற்றிகொள்ளுங்கள். நீண்ட கால உபவாசத்தின் மூலம் எல்லாம் மனமே என்பதை நீங்கள் அறிவீர்கள்."

மேலும் அவர் தொடர்கிறார்: "ஒரு கனவில் நீங்கள் காணும் எல்லா பொருட்களும் உங்கள் சொந்த மனதின் படைப்புகள் போன்று இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு சக்தியும், பொருளும் இறை மனதின் படைப்பாகும்; விழிப்பு நிலையில் கூட, உபவாசத்தினால் உங்கள் தேகம் பலவீனமாகும் என்ற எண்ணத்தை உங்கள் மனம் உண்டாக்கினால், அது பலவீனம் அடையும் அல்லது நீங்கள் உபவாசம் இருக்கும்பொழுது , அது உங்களை பலவீனப்படுத்துகிறது என்று கணப்பொழுது நினைக்கிறீர்கள் என்றால். தேகம் உண்மையாகவே பலவீனத்தை உணரும். ஆனால் உங்கள் தேகம் வலிமையாக உள்ளது என்று உங்கள் மனதைத் திடப்படுத்தினால், அது எந்த பலவீனத்தையும் உணராது; மாறாக, அது மாபெரும் சக்தியை உணரும். அநேக மக்கள் இதை அறியமாட்டார்கள் ஏனென்றால் இதை ஒருபோதும் சோதித்துப் பார்த்ததில்லை.



குருப்ரியா

மனமானது, அதை நீங்கள் உழைக்குமாறு செய்தாலொழிய தனது அற்புதங்னை வெளிக்காட்டாது. மேலும் நீங்கள் உலகப் பொருட்களின்மீது மேலும் மேலும் சாந்திருப்பதைத் தொடரும்வரை அது வேலை செய்யாது. அதனால்தான் அதனது அற்புதங்கள் சாதாரணப் பார்வையிலிருந்து எப்பொழுதும், மறைக்கப்பட்டுள்ளன. ஆனால் உபவாசத்தின் மூலமாக நீங்கள் மனதைச் சார்ந்திருப்பது எப்படி என்று அறியும்போது அது நோயை வெல்வதிலோ அல்லது வளத்தை உண்டாக்குவதிலோ அல்லது இறைவனைக் காண்பது என்னும் வாழ்க்கையின் உன்னத இலக்கை அடைவதிலோ ஆகிய எல்லா விதத்திலும் செயற்படும். "தன்னையே ஆளும் யோகி தனது மனதை முழுவதுமாக கட்டுப்பாட்டில் வைத்திருப்பவன் தனது ஆத்மாவை பரமாத்மாவுடன் இடைவிடா தியான ஐக்கியத்தில் வைத்து, எனது இருப்பெனும் அமைதியை எய்துகிறான்; முடிவான வீடுபேறு (முக்தி). பகவத் கீதை அத்தியாயம் க்ஷிமி ஸ்லோகம் 15)

கட்டுரை பாகம் 98 மற்றும் 99-ல் குறிப்பிட்டுள்ளவற்றை இதற்கும் எடுத்துக் கொண்டு செயல்படுவதே சாலச்சிறந்தது. பாகம் 99-ல் குருதேவர் கூறியுள்ளவற்றை மனதில் பதியவைத்து செயல்படவேண்டும். குருதேவர் கூறும் உபவாச முறை நாம் ஒவ்வொருவரும் இறைவனை அடைவதற்கான வழிகளில் இதுவும் ஒன்று. குருதேவர் நமக்காக அதை சிபாரிசு செய்கிறார். மனிதர்களுக்காக குருதேவர் எடுத்துள்ள முயற்சி வெற்றி பெற்றுக்கொண்டிருக்கிறது.

மேலும் வெற்றியடைய பரம்பரை பரம்பரையாக நாம் அனைவரும் உபவாசத்தைக் கடைபிடிக்கவேண்டும் என்ற குருதேவருடைய போதனையை ஏற்றுக்கொண்டு, செயல்பட்டு, இறைவனடி சேருவதற்கான வாய்ப்பினை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

www.aanmeegamalar.com

# உடனடி பலன் தரும் திருமால் அவதாரங்கள்

## சூட்சுமமாக கூறிய இடைக்காடர்




ஒரு முறை திருமாலை வழிபடுவோர்க்கு ஓர் ஐயம் உண்டானது. திருமால் பத்து அவதாரம் எடுத்துள்ளாரே இதில் எந்த அவதாரத்தை வழிபட்டால் விரைவில் பலன் கிடைக்கும் என்று ஆலோசித்தனர்.

இதற்கான விடை காணாது தவித்த பக்தர்கள் இடைக்காடர் சித்தரிடம் இதற்கான விடையைப் பெற்றிடலாம் எனக் கருதி, இடைக்காடரிடம் இதுகுறித்து சந்தேகத்தை கேட்டனர்.

சித்தர் பெருமானாகிய இடைக்காடர் "இளிச்ச வாயன், ஏழை, இடையன்" என்று பதில் கூறி விட்டுச் சென்றார்

தங்கள் ஐயப்பாட்டுக்கு விடை தேடி வந்த திருமால் பக்தர்களுக்கு சித்தரின் பதில் சட்டெனப் புரியவில்லை. நீண்ட நேரம் யோசித்தனர்.

பின்,

| | |
|---|---|
| இடையன் | என்றால் கிருஷ்ணர், |
| இளிச்சவாயன் | என்றால் நரசிம்மர், |
| ஏழை | என்றால் சக்கரவர்த்தித் திருமகனாகப் பிறந்தும் ஏழையாகவே வாழ்ந்த இராமன் |

என்று முடிவு செய்தனர்.

அதன்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான், நரசிம்ம மூர்த்தி ஸ்ரீ இராமபிரான் ஆகிய மூவரையும் வழிபட்டால் விரைவில் இறையருள் கிட்டும் என்பதை உணர்ந்து தெளிந்தனர். தங்களது ஐயப்பாட்டை எளிதில் தீர்த்தருளிய இடைக்காடரின் நுண்ணறிவைப் போற்றி மகிழ்ந்தனர்.

www.aanmeegamalar.com

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



# 7ன் சிறப்பு



கே.ஆர்.ஜி.ஸ்ரீராமன்

**பிறவிகள்:**

ஏழு, என்பதற்கு, அளவில்லாதது. என்றோரு. பொருளும் உண்டு! ஆகவே, எண்ணற்ற பிறவிகள் இருந்தாலும், பிறவிகள் ஏழு என்று சொல்லி உள்ளார்கள்.

**ரிஷிகள்:**

1.அகத்தியர், 2. காஷ்யபர், 3.அத்திரி, 4.பரத்வாஜர், 5.வியாசர், 6.கவுதமர், 7.வசிஷ்டர் ஆகிய ஏழு பேரை சொல்லி உள்ளார்கள்.

**கன்னியர்கள்:**

இவர்களை சப்த கன்னியர்கள், சப்த மாதாக்கள் என்றும் கூறலாம்! இவர்கள் 1.பிராம்மி, 2.மகேஸ்வரி, 3.கௌமாரி, 4.வைஷ்ணவி, 5.வராகி, 6.இந்திராணி, 7.சாமுண்டி, ஆகியோர் ஆவர்! இவர்களை வழிபட்டால் முறையே சினம், பேராசை, மாயை, காமம், குற்றம், கோள் சொல்லுதல், பொறாமை ஆகிய தீய குணங்கள் அழியும்.

**ஸ்வரங்கள்:**

"சட்ஜம்", "ரிஷபம்", "காந்தாரம்", "மத்யமம்", "பஞ்சமம்", "தைவதம்", "நிஷாதம்" என ஏழு ஸ்வரங்கள். இவை. முறையே, ஸ,. ரி,. க,. ம,. ப,. த,. நி,. எனப்படுகிறது.

**மலைகள்: (கிரிகள்)**

திருமலையில் அடங்கியுள்ள மலைகள் ஏழு, அவை 1.சேஷாத்ரி மலை, 2.அஞ்சனாத்ரி மலை, 3.நாராயணாத்ரி மலை, 4.விருஷபாத்ரி மலை, 5.கருடாத்திரி மலை, 6,வேங்கடாத்ரி மலை, 7.நீலாத்திரி மலை எனப்படுகிறது.

**சக்கரங்கள்:**

இந்த ஏழு சக்கரங்கள் தான், நமது உடலை கட்டுப்படுத்துகிறது.வை, 1. மூலாதாரம், 2.ஸ்வாதிஸ் டானம், 3.மணிபூரகம், 4.அனாகதம், 5.விசுத்தி, 6.ஆக்ஞை, 7.சகஸ் ராரம், அல்லது பிரம்மாந்திரம்.

**கண்டங்கள்:**

இந்த உலகத்தில், கண் டங்கள் ஏழு உள்ளன, அவை, 1.ஆசியா, 2.ஐரோப்பா, 3.ஆப்பிரிக்கா, 4.வட அமெரிக்கா, 5.தென் அமெரிக்கா, 6. ஆஸ்திரேலியா, 7.அண்டார்டிக்கா ஆகியவை ஆகும்.

**காண்டங்கள்:**

காண்டங்கள் என்பது, நமது இராமாயணத்தில் உள்ள காண்டங்கள் ஆகும். அவை 1.பாலகாண்டம்,




www.aanmeegamalar.com

2.அயோத்தியா காண்டம், 3.ஆரண்ய காண்டம், 4.யுத்த காண்டம், 5.உத்தர காண்டம், 6.கிஷ்கிந்தா காண்டம், 7.சுந்தர காண்டம் ஆகும்.

**நிறங்கள்::**

வானவில்லின். நிறங்கள் ஏழு,... அவை 1. ஊதா, 2. கருநீலம், 3. நீலம், 4. பச்சை, 5. மஞ்சள், 6. சிவப்பு, 7. இளஞ் சிவப்பு, ஆகும்.

**தாதுக்கள்:**

மானிட உயிர்கள் உருவாக. இந்த தாதுக்கள் காரணமாகும்,. அவை 1.இரசம், 2.உதிரம், 3.மாமிசம், 4.கொழுப்பு, 5.மஜ்ஜை, 6.மூளை, 7.சுக்கில சுரோனிதம் ஆகும்.

**புண்ணியங்கள்:**

புண்ணியங்கள் ஏழு அவை 1. தாழ்ச்சி, 2.பொறுமை, 3.கற்பு, 4.உதாரம், 5.மட்டசனம், 6.பிறர் சிநேகம், 7.சுறுசுறுப்பு ஆகும். உதாரம் என்றால். தாராளம்! மட்டசனம் என்றால் குறைவாக சாப்பிடுதல். ஆகும்..

**நாட்கள்:**

1.ஞாயிறு, 2.திங்கள், 3.செவ்வாய், 4.புதன், 5.வியாழன், 6.வெள்ளி, 7.சனி என்பன ஆகும். மீதம். உள்ள. ஏழின் சிறப்பிக்களை. அடுத்த இதழில் பார்க்கலாம்.!

– கே.ஆர்.ஜி.ஸ்ரீராமன், பெங்களூரு77
தொலைபேசி எண்: 9972466443

# மண் தின்னும் உடலுக்கு இத்தனை பெயர் கடவுளுக்கு இருக்க கூடாதா?

கவிஞர் கண்ணதாசனிடம், வெளிநாட்டினர் ஒருவர் கேட்டாராம் "உங்களுக்கு மட்டும் இத்தனை கடவுள்கள் சிவன், ராமன், கண்ணன், பார்வதி, சரஸ்வதி, லட்சுமி, காளி, முருகன், பிரம்மா என பல பெயர்கள் வைத்திருக்கிறீர்கள்? எங்களை போலஒரு கடவுள் என வைத்துக் கொள்ளாமல்,' என்று கேட்டாராம்.

அதற்கு மிக பொறுமையாக திருப்பி அந்த மனிதரிடமே, 'உன் பெற்றோர்க்கு நீ யார்.?' எனக் கேட்டார்.

அதற்கு அவர், 'மகன்' என பதிலளித்தார்.

'உன் மனைவிக்கு.?'... கேள்வி தொடர்ந்தது.

'கணவன்'!

'உன் குழந்தைகளுக்கு?'

'அப்பா, தந்தை!'

உன் அண்ணனுக்கு?'

'தம்பி!'

'தம்பிக்கு?'

'அண்ணன்!'

'கொழுந்தியாளுக்கு.?'

'மச்சான்!'

'அண்ணன் குழந்தைகளுக்கு?'

'சித்தப்பா!'

விடவில்லை, கேள்விகள் நீண்டு கொண்டே நீண்டு கொண்டே போனது.

பெரியப்பா, மைத்துனர், மாமன், மச்சான் என பல உறவுகளில் பதில் வந்து கொண்டே இருந்தது. சில நிமிடங்கள் கண்ணதாசன் நிறுத்தினார். பின்பு ஆரம்பித்தார்.

வெறும் மண்ணை தின்னப் போகும் உன் சடலத்திற்கே இத்தனை பெயர் வைத்து அழைக்கும் போது, "யாதுமாகி நின்று, எங்கெங்கும் நின்று உலகையே கட்டிக் காக்கும் என் அப்பன் பரம் பொருளை எத்தனை பெயர்களால் அழைத்தால் என்ன? அவன் எதற்குள்ளும் அடங்காதவன், எதற்குள்ளும் இருப்பவன். உன்னுள்ளும் இருப்பவன், என்னுள்ளும் இருப்பவன். உன்னை அழைத்தாலும் அவனே, என்னை அழைத்தாலும் அவனே." என முத்தாய்ப்பாக முடித்தார்.



www.aanmeegamalar.com

# நெதர்லாந்து தேசத்தில்

# விண்ணுயரத்தில் விநாயர் கோயில்!

வெளிநாட்டில் வாழ்வோரை நிழலாய் துரத்தும் ஒருவகை ஏக்கத்தை, "வீட்டுக் காய்ச்சல்" (ஹோம்சிக்) என்று கூறுவதில் தவறில்லை.இந்தக் காய்ச்சல் பல நாட்கள் உள்ளே ஒளிந்திருக்கும் ஒரு சில நாட்களில் உறுத்தி உறக்கத்தையே பறிக்கும்.

தமிழகத்தில் நடுத்தர குடும்பத்தில் பிறந்தோர் வெளிநாடு வந்தால் அவர்களுக்கு தன்னையும் அறியாமலேயே வரும் இன்னொரு நோயும் உண்டு "கோவில் காய்ச்சல்", கைத்தவறி விழுந்த புத்தகத்தை கூட எடுத்து கண்ணில் ஒத்திக்கொண்டு, மரத்தடி பிள்ளையாரே, அம்மன் கோவிலோ என்று பாராமல் கன்னத்தில் போட்டுக்கொள்ளும் மக்களுள் யாமும் ஒருவன் தான்.

பெற்ற தாயையும் உற்ற காதலியும் உடன் இருக்கும் போது அதன் அருமை நமக்குத் தெரிவதில்லை அதுபோன்றே பேசும் தமிழும் வணங்கும் கோயிலும் நம் அன்றாட வாழ்வில் பிண்ணிப்பிணைந்தவை.

வங்கக்கடல் ஓரம் இருந்தோர் வட துருவம் வடகடல் மோதி விளையாடும் ஒல்லாந்தர் தேசம் வந்தால், கூப்பிட்ட குரலுக்கு அம்மையும் இல்லை தேடி கைகூப்ப கோவிலும் இல்லை என்ற கவலை சிலநேரம் வருவதுண்டு.




தமிழர்கள் கடல் கடந்து வந்தாலும் பேசும் மொழியையும், பூசிக்கும் தெய்வத்தையும் உடன் அழைத்து செல்ல மறப்பதில்லை, தமிழையும் தெய்வீகத்தையும் இரு கண்களாக போற்றுபவர் கடல் சூழ்ந்த ஈழ நாட்டின் தமிழர்கள், வடக்கே யாழ் நகரின் நல்லைக்கந்தன் முதல் தெற்கே கதிர்காமம் வரை மேற்கே மாந்தை முதல் கிழக்கே கோணேஸ்வரம் வரை ஆலயங் களை இக்கட்டான சூழ்நிலையிலும் நெறி தவறாது போற்றினர்.

நெதர்லாந்தில் வாழும் இலங்கைத் தமிழ் மக்கள் இப்படி தாங்கள் போற்றி வணங்க ஒரு



ஆலயம் எழுப்ப நினைத்து இந்த ஒல்லாந்தர் தேசத்தில் வடகடல் ஓரம் டென் ஹெல்டர் எனும் பகுதியில் விண்ணுயர் கோபுரமும் கொடிமரமும் கொண்டு ஓர் ஆலயம் பணித்தனர்.

குரோனிங்கென் திருநகர் வந்தது முதல் டென் ஹெல்டர் செல்லும் வழியை கூகிள் வரைபடங்களில் பலநாட்கள் பார்த்ததுண்டு, இரயிலேறி சென்றால் சுமார் மூன்றரை மணி நேரம், செல்லும் போது கோவிலின் திறப்பு நேரமும் ஒத்துவரவேண்டும். குரோனிங்கென் நகரில் தமிழ் பேசும் மக்களிடம் ஒரு வழியாய் பேசி திட்டம் தீட்டி ஒரு வெயில்கால சனிக்கிழமை முதல்முறை சென்றோம். குரோனிங்கென், சுவாளே ஆம்ஸ்டர்டாம், டென் ஹெல்டர் என்று சுற்றிக்கொண்டு சென்றது இரயில், காலை பதினொன்றரை மணிக்கு டென் ஹெல்டரில் இறங்கி ஒரு ஐந்து நிமிட பேருந்து பயணத்தில் அந்த பகுதியை அடைந்தோம்.



Waran. M

மரங்கள் சூழ்ந்த சாலையினூடே சற்றே சென்றால் கண்முன்னே, நீலவானை கிழித்துக் கொண்டு நிற்கும் செம்பவள கோபுரம், ஒரு கணத்தில் யாரோ அப்படியே தூக்கி திருமயிலையில் விட்டார் போல் ஒரு உணர்வு! யாழிகளும் தோரணவாயிலும் கடந்து உள்ளே சென்றால் வர்ணஜாலமான மேல் விமானம் கொடிமரம், கொடிமரத்தின் நேர் மேலே யானையும் காளையும் சேர்ந்த தாராசுரத்தில் காணப்படுவது போன்ற ரிஷபகுஞ்சர ஓவியம், அனைத்து சன்னதிகளிலும்திரை போடப்பட்டிருந்தது.

உச்சிவேளை பூசை சமயம், சற்று நேரத்தில் தேவபாஷையும், தீந்தமிழும் ஒலிக்க திரைகள் நீக்கி கருவறையில் ஆனைமுகர்க்கு ஆராதனை.

அருள்மிகு வரதராஜ செல்வவிநாயகர் என்பது ஆலய பிள்ளையாரின் திருப்பெயர். இருபுறமும் அப்பனும், அம்மையும் சற்றே உள் வலம் வந்தால் தனி சன்னதியில் திருமகள், கோஷ்டத்தில் கணபதி, தென்முகக் கடவுள், லிங்கோத்பவர், பிரமன், கொற்றவை மற்றும் சண்டி கேசர் தனி சன்னதியில் தமிழர் கொண்டாடும் முருகன், முன்னே வந்தால் குழலூதும் கண்ணன், ஆலிலைக் கண்ணன், பிள்ளையாரின் ஐம்பொன் திருமேனிகளும், சிறிய சன்னதியில் மாயக் கண்ணனும் தொடர்ந்து உற்சவர் திருமேனிகளும், ஒன்பது கோளும் ஆலயம்காப்போன் பைரவர் என ஆலயம் நிறைந்து நிற்கிறது. ஆலய குருக்கள் பூசனை முடித்துவிட்டுகனிவாய் பேசினார். கோவிலின் பூசை நேரம், திருவிழாக்கள் என்று அத்துனையும் எடுத்துச் சொன்னார், தேர் இழுத்தல் முதல் சூரசம்ஹாரம் வரை ஒரு குறையுமின்றி விழாக்கள் செய்யப்படுகின்றனவாம்.

கோவிலுக்கு எளிதில் எப்படி வரவேண்டும் என்ற போக்குவரத்து தகவல் முதல் இந்த தேசத்தில் சூரிய உதய அஸ்தமனத்திற்கு ஏற்றவாறு பஞ்சாங்கம் மாறுவது வரை அக்கறையுடன் சொல்லக் கேட்டோம். பல நாட்கள் ஓடிய பிறகு இன்று இந்த இலையுதிர்காலத்து அட்டமி நாளில் மீண்டும் டென்ஹெல்டர் கோவில் செல்லும் வாய்ப்பு, இலைகள் உதிர்ந்த மரங்களினூடே கார்மேகத்தை கிழித்துக்கொண்டு அதே கம்பீரத்துடன் நிற்கிறது கோபுரம்!

முதல்முறை வந்தபோது கைகூப்பி தொழுத நான் இன்று தீந்தமிழ் தேவாரம் சொல்லட்டுமா என்று கேட்க இசைந்து அனுமதி தந்தார் குருக்கள், பல மைல்களுக்கு அப்பால் இன்று நாலு வார்த்தை தீந்தமிழ் சொன்னது மனதில் வெள்ளையடித்தது போல் ஒரு உணர்வு.

- Waran. M
0031223620313



# மகிமை வாய்ந்த மலை விபூதி




திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள படவேடு திருத்தலத்தில் உள்ளது ஸ்ரீரேணு காம்பாள் கோயில். இங்கே, பக்தர்களுக்கு வழங்கப்படும் விபூதி விசேஷமானது என்கின்றனர் கோயில் ஊழியர்கள்.

அருகில் உள்ள மலையில் இருந்து எடுத்து வரப்படும் விபூதியை பிரசாதமாகத் தருகின்றனர். மலையில் கமண்டல நதியின் உற்பத்தி ஸ்தானத்தில், இரண்டு பக்கமும் மண் மேடாக காட்சி தருகிறது.

இங்குதான் ஜமதக்னி முனிவர் தவம் புரிந்து, யாகம் நடத்தினாராம்! இந்த இடத்தில் உள்ள மண், விபூதியைப் போன்றே இருப்பது சிறப்பு! ஒவ்வொரு ஆனி மாத உத்திரத்தின் போது, சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு விபூதியை எடுத்து வந்து பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்குகின்றனர்.

இந்த விபூதியை நெற்றியில் இட்டுக் கொண்டால், தீராத வியாதிகள் தீரும். துஷ்ட சக்திகள் விலகி ஓடிவிடும். மங்கலகாரியங்கள் தடையின்றி நிகழும் என்பது ஐதீகம்!



# இறைவனை உணர்ந்தவர்களால் எவருக்கும் தொல்லையே இல்லை

யானையின் பெருமை யானையினிடமும், பூனையின் பெருமை பூனையினிடமும் உள்ளது. அதுபோல் உலகின் பெருமை மனிதனிடமே உள்ளது. உலகினில் இருந்து பெருமையை எடு.

❖❖❖

ஆன்மாவின் பெருமையை உணரு. உடனே ஆண்டவனின் பெருமையை உலகெங்கும் சொல்லலாம்.

❖❖❖

தலைக்குள்ளிருந்து தலைக்குள்ளேயே சிந்தனைச் சாறு சொட்டுவதாக, கண்ணை மூடிக்கொண்டு தியானம் செய். மூளை தாமரையாய் மேலே எழும்பும்.

❖❖❖

நீர் நிலைகளை மீன் சுத்தப்படுத்துவது போல் உண்மையாய் உலகைச் சுத்தப்படுத்து. முன்னேறிவிடுவாய்.

❖❖❖

மனம் சுத்தமாகாவிடில் இறைவன் கண்களுக்குத் தெரியமாட்டான். பக்தி, மனதைச் சுத்தப்படுத்தி ஆண்டவனை முகத்தின் எதிரே நிற்க வைக்கிறது.

❖❖❖

சோம்பலே புத்திக்குப் போடும் மாயத்திரை. அதை விலக்கு. பிறகு நீ சுகமாக இருக்கலாம்.

❖❖❖

எருமை மாட்டின் மீது காக்கை, குருவி அமர்ந்து சவாரி செய்வது போல் உனது அறியாமையினுள் கடவுள் சவாரி செய்கிறான். இந்த வைபவத்தை எண்ணு, ஞானம் உடனே பிறந்துவிடும்.

❖❖❖

உலகவர் தரும் தொல்லைகளுக்கு பயப்படாதே. அவர்கள் சிந்திப்பதில்லை, அதனால் தொல்லை தருகிறார்கள்.

❖❖❖

எந்த ஆட்டத்தில் நீ ஆடு அல்லது எந்த ஆட்டத்தில் நீ புலி என்று ஆண்டவனிடம் சொல். நீ எதுவானாலும் ஆண்டவன் உன்னைக் காப்பாற்றிவிடுவான். அதுவே ஆண்டவனின் ஆட்டம்.

❖❖❖

கவலை கொண்டால் உனது கவலைக்கு நீயே தீனி ஆவாய். இச்சிந்தனையிலிருந்து விடுபடு. உய்வடைவாய். கவலையே கவலைக்குத் தீனி.

❖❖❖

புளிக்கு புளிப்பைப் பற்றி என்ன கவலை? அதுபோல் இறைவனை எண்ணு. உனக்கு கவலையே இருக்காது.

❖❖❖

சாம்பலில் நாய் படுத்து உறங்கும். அதுபோல் மனிதன் சோம்பலில் படுத்துத் தூங்கக்கூடாது.

❖❖❖

கார் ஓடும்பொழுது காருக்குள் மனிதனால் ஓடமுடியுமா? முடியாது. அதுபோல்



www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

அருள்கிட்டிவிட்டால் உன்னால் என்ன செய்ய முடியும்? ஒன்றுமே செய்ய முடியாது. கடவுளைத் தான் தொழ முடியும்.

❖❖❖

கோபுரத்து பொம்மைக் கிளி பயிர் பச்சைகளை அழிக்காது. அதுபோல் இறைவனை உணர்ந்தவர்களால் எவருக்கும் தொல்லையே இல்லை.

❖❖❖

உனது புத்தி எப்பொழுதும் குறையாது. அதனால் நீ எப்பொழுதும் சிந்தனை செய்யலாம். உனது உள்ளத்தில் பக்தி தீராது. அதனால் நீ பிறவிதோறும் பக்தி செய்யலாம்.

❖❖❖

ஒவ்வொரு முறையும் சாப்பிடுவதுபோல் ஒவ்வொரு முறையும் சிந்திக்க முடியுமா என்று யோசி. முடிந்தால் உனக்கு சிந்தனைப் பசி வந்துவிட்டது என்று பெயர்.

❖❖❖

நாய் எலும்புத் துண்டை அடிக்கடி கடிப்பது போல் பக்தி மனம் ஆண்டவனை அடிக்கடி நினைக்கும். துதிக்கும்.

❖❖❖

மனித வாழ்க்கை அடிக்கடி கோணலாகி விடுவது மனிதனுக்குத் தெரியாது. புத்தியினால் அதைத் திருதிக் கொள்வதே நலம்.

❖❖❖

பள்ளிப் பிள்ளைகளை அடிக்க, காவல் துறையினர் உபயோகிக்க பிரம்பு செய்கின்றனர். அதேபோல் மனிதனின் வாழ்க்கையை நேராக்கவே ஆண்டவன் இருக்கிறான்.

❖❖❖

மனம் உவந்து மிருகங்களை நேசிக்கக் கற்றுக் கொள். இந்தப் பெரிய பாடம், உனது மனதினுள் கருணையைத் தேடும்.

❖❖❖

கல்லுக்குள் ஈரம் உண்டா? மனிதன் கருணை உள்ளவனா? ஆணவமில்லா பக்தியே இதை நிரூபிக்கும்.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன் நடராஜன்**
செல்: 9444228203
•••
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி, தன்ஷிகா
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

# குறிச்சி கிராமத்தில் காட்சிதரும்

# காசி விஸ்வநாதர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே குறிச்சி கிராமத்தில் அமைந்துள்ள மிகப் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ காசி விஸ்வநாத சுவாமி திருக்கோவில்.

இத்திருக்கோவிலில் தை அம்மாவாசை திருநாளை முன்னிட்டு சிறப்பு வழிபாடு வெகு விமரிசையாக நடைபெற்றது.

இத்திருக் கோயிலில் அருள்பாலிக்கும் ஸ்ரீ காசி விஸ்வநாதர் சிலை மற்றும் அன்னபூரணி மற்றும் ஆஞ்சநேயர் சிலைகள், காசியிலிருந்து கொண்டு வந்து இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு நடைபெறுகிறது.

காசியை போல்கோவில் கட்டிய சிவபக்தர் பழனிசாமி (9444159653) கூறுகையில், இத்தலத்தில் சிவபெருமானை விஷேச நாட்களில் பக்தர்கள் தங்கள் கைகளாலேயே அபிஷேகம் செய்யலாம், மேலும் இத்திருக்கோவில் காசி போன்ற அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது, காசிக்கு சென்று தர்ப்பனம் கொடுக்க முடியாதவர்களுக்காக, காசியில் நடைபெறுவதைப் போன்று, காசி புனித நீரால் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்து, காசி பைரவர் சன்னதியில் பூஜை செய்யப்படுகிறது.




சமீபத்தில் தை அமாவாசையன்று அனைத்து தெய்வங்களுக்கும் சந்தன காப்பு அலங்காரம் செய்யப்பட்டு, சிறப்பு பூஜைகளும் தீபாராதனைகளும் கட்டப்பட்டன, தொடர்ந்து ஏராளமான பக்தர்கள் காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட கங்கை தீர்த்தத்தால் மூலவர் ஸ்ரீ காசி விஸ்வநாதர் சுவாமிக்கு அபிஷேகம் செய்து சுவாமி தொட்டு வணங்கி வழிபட்டனர்.

இத்திருக்கோவிலேயே முன்னோர்களுக்கு தர்ப்பணம்




www.aanmeegamalar.com







கொடுக்கும் நிகழ்வும் நடைபெறுகிறது.

மேலும், கோவில் கும்பாபிஷேகத்திற்கு தேவையான கங்கா தீர்த்தத்தை இலவசமாக இப்போதும் வழங்கபடுகிறது. காசி ராமேசுவரம் செல்ல முடியாத பக்தர்கள் இங்கு வந்து தரிசனம் செய்த வண்ணம் உள்ளனர். இயற்கையாகவே அரசமரம் வேம்புமரம் தலவிருட்சமாக வளர்ந்து வருகிறது.


அழகுராஜா

இத்திருக்கோவிலில் ஸ்ரீ ராஜ கணபதி, ஸ்ரீ முருகப் பெருமான், ஸ்ரீ காசி விஸ்வநாதர், ஸ்ரீ காசி அன்னபூரணி, ஸ்ரீ பெரியநாயகி அம்மன், ஸ்ரீ ஆதி பைரவர், ஸ்ரீ சப்த கன்னிமார் அம்மன், ஸ்ரீ காளியம்மன், ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ கருப்பண்ண சுவாமி மற்றும் நவக்கிரகங்கள் தனித்தனி சன்னதிகளில் அருள்பாலித்து வருகிறார்கள்.

சிவகங்கை மாவட்டம் மானா மதுரையில் இருந்து பரமக்குடி செல்லும் சாலையில் குறிச்சி கிராமத்தில் இத்திருக்கோவில் உள்ளது.

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா செல்: 9994162192

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

www.aanmeegamalar.com

# கொரோனா பாதிப்பில் இருந்து பாதுகாக்கும் நாமஜபம்

கொரோனா வைரஸ் தொற்று நம் எல்லோர் வாழ்வையும் அணுகி நம் அன்றாட நடை முறை செயற்பாடுகளை வியத்தகு முறையில் பாதித்துள்ளது. நம்முடைய பாதுகாப்பிற்காக கடுமையான நடவடிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன, மேலும் இந்த புதிய சூழ்நிலையை அனுசரித்து நடந்து கொள்வதற்கு நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம்.


கொரோனா வைரஸிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள மருத்துவ ரீதியாக என்ன செய்ய முடியும் என்பது குறித்த நல்ல தகவல்கள் கிடைத்தாலும், இந்த கடினமான காலங்களில் நம்மில் பலர் ஆன்மீக உதவியை நாடுகிறோம்.

பிரார்த்தனை, கொரோனா வைரஸின் தீங்கு விளைவிக்கும் பாதிப்புகளில் இருந்து நம்மைப் பாதுகாக்க உதவுவது மட்டுமல்லாமல், நம் உள் வலிமையையும் அதிகரிக்கும் ஒரு எளிய நாமஜபம் உள்ளது.



**கொரோனா வைரஸிற்கான நிவாரண நாமஜபம்**

கடவுளின் பெயரை நாம் மீண்டும் மீண்டும் சொல்லும்போது, அந்த குறிப்பிட்ட தெய்வத்தின் பெயருடன் தொடர்புடைய தெய்வீக நேர்மறை சக்தியை நாம் ஈர்க்கிறோம். அந்த பெயரின் ஆன்மீக சக்தி ஒரு பாதுகாப்பு கவசமாக நம் மைச் சுற்றி உருவாக்கப்படுகிறது.



கொரோனா வைரஸுக்கு எதிரானஆன்மீக பாதுகாப்பிற்கான ஒரு குறிப்பிட்ட நாமஜபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நாமஜபத்தில் கொடுக்கப்பட்ட கடவுளின் பெயர்கள் ஸம்ஸ்க்ருதத்தில் உள்ளன.

இந்த நாமஜபத்தின் குறிப்பிட்ட வரிசைமுறை ஆன்மீக ஆராய்ச்சி மூலம் பெறப்பட்டுள்ளது. இந்த நாமஜபம் 3 தெய்வங்கள் அல்லது கடவுளின் தெய்வீக தத்துவங்களிலிருந்து ஆன்மீக சக்தியை பெற்றுத் தருகிறது.

துர்காதேவி தீமைகளை அழிக்கும்செயல்பாட்டைச் செய்யும் கடவுளின் ஒருதத்துவத்தை குறிக்கிறாள். பிரபஞ்சத்தின் பிற செயல்பாடுகளுடன், இறந்த மூதாதையர்களின் (பித்ருக்கள்) சூட்சும தேஹத்தால் ஏற்படும் பிரச்சனைகளிலிருந்தும் தீய சக்திகளிலிருந்தும் தத்தாத்ரேயர் பாதுகாக்கிறார். சிவபெருமான் அழித்தல் வேலையை செய்யும் கடவுளின் தத்துவத்தை குறிக்கிறார் இந்த நாமஜபம் பின்வரும் வரிசையில் மீண்டும் மீண்டும் செய்யப்பட வேண்டும்.

ஸ்ரீ துர்கா தேவ்யை நமஹ
ஸ்ரீ துர்கா தேவ்யை நமஹ
ஸ்ரீ துர்கா தேவ்யை நமஹ
ஸ்ரீ குருதேவ தத்த

ஸ்ரீ துர்கா தேவ்யை நமஹ
ஸ்ரீ துர்கா தேவ்யை நமஹ
ஸ்ரீ துர்கா தேவ்யை நமஹ
ஓம் நம சிவாய

**எத்தனை முறை இந்த நாமஜபம் செய்ய வேண்டும்?**

நான் பாதிக்கப்படவில்லை அல்லது பாதிப்புக்கான அறிகுறிகளும் இல்லை: கொரோனா வைரஸ் தொற்றுநோய் தொடர்பான எந்த அறிகுறிகளையும் நீங்கள் உணரவில்லை என்றால், நீங்கள் இந்த நாமஜபத்தை தினமும் 108 முறை மனதில் செய்யலாம். இவ்வாறு செய்ய ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகும் (அதாவது, 8 நாமங்களையும் வரிசை முறையில் 108 முறை சொல்ல).

நான் பாதிக்கப்பட்டுள்ளேன் அல்லது பாதிப்புக்கான அறிகுறிகள் உள்ளன : நீங்கள் அறிகுறிகளை உணர்ந்தால் அல்லது வைரஸால் பாதிக்கப்பட்டிருந்தால், அதனை எதிர்த்துப் போராடுவதற்காக உங்கள் ஆன்மீக சக்தியை அதிகரிக்க இந்த நாமஜபத்தை தினமும் 648 முறை மனதில் செய்யலாம். இதற்கு சுமார் 7.5 மணி நேரம் ஆகும்.

**என்னைப் பாதுகாக்க இந்த நாமஜபம் போதுமானதா?**

இந்த நாமஜபம் ஆன்மீக நிலையில் ஒருவரை பாதுகாக்கிறது: இதற்குக் காரணம், வைரஸின் உருவாக்கம் மற்றும் பரவலுக்கான மூல காரணம் ஆன்மீக நிலையில் இருப்பதே.

இருப்பினும், அறிகுறிகள் பௌதீகமானது என்பதால், மருத்துவர்கள் அறிவுறுத்தியபடி, பௌதீக மட்டத்தில் (உங்கள் கைகளை கழுவுதல், சமூக தூரத்தை பராமரித்தல், ஒருவரின் முகத்தைத் தொடுவதைத் தவிர்த்தல், ஒருவர் தன் முழங்கைக்குள் இருமுதல் போன்றவை) எல்லா நடவடிக்கைகளையும் நாம் பின்பற்ற வேண்டும். நம்மைப் பாதுகாக்க அவர்கள் பரிந்துரைக்கும் மருத்துவ சிகிச்சையையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

வெறுமனே நாமஜபம் மட்டுமே செய்வது, மருத்துவ வல்லுநர்களால் அறிவுறுத்தப்படும் உடலளவிலான அல்லது மனதளவிலான தீர்வு களுக்கு மாற்று இல்லை என்பதை தயவுகூர்ந்து நினைவில் கொள்க.

இந்த நெருக்கடியின் போது பாதுகாக்கப்பட இந்த கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ள நாமஜபத்தினை




செய்ய உங்கள் அனைவரையும் நாங்கள் ஊக்குவிக்கிறோம். அதோடு கூட, உங்கள் குடும்ப உறுப்பினர்கள் அல்லது அன்புக்குரியவர்களைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்களானால், இந்த நாமஜபத்தைப் பற்றி அவர்களிடம் சொல்வது நீங்கள் அவர்களுக்கு வழங்கக்கூடிய சிறந்த ஆன்மீக உதவியாகும்.

**மேலும் விவரங்கலுக்கு**
www.hindujagruti.org
**தொடர்பு: 09380949626**





மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்


www.aanmeegamalar.com

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க

# aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்





















# மகிமை வாய்ந்த கனகதாரா ஸ்தோத்திரம் மீண்டும் நிருபித்த பெரியவா

கனகதாரா ஸ்தோத்திரத்திற்கு மிகுந்த சக்தி உள்ளதை ஆதிசங்கரர்தான் முதன் முதலில் கூறினார். அதைத் தொடர்ந்து லட்சுமி கடாட்சம் வேண்டுபவர்கள் கனகதாரா ஸ்தோத்திரத்தை கெட்டியாக பிடித்துக் கொண்டனர்.

இந்த கனகதாரா ஸ்தோத்திரத்திற்கு சக்தி உள்ளதை பெரியவா காலத்தில் அவரும் நிருபித்து காண்பித்துள்ளார்.

கலியுகத்தில்கூட இந்த கனகதாரா ஸ்தோத் திரத்தின் சக்தி அளவிட முடியாதது என்பதை வெளிப்படையாக நிகழ்த்தி காட்டியுள்ளார்.

பெரியவா செய்த அற்புதத்தை பார்ப்போம்....

கனகதாரா பாடிய மகான் ஆதி சங்கரரின் பாதம் பதித்த தலம், காஞ்சிபுரம். ஸ்ரீமடம் இருக்கும் புண்ணிய பூமி! இங்கே தனிப்பெருமையோடு ஆட்சி செய்பவள் அன்னை காமாட்சி.

அவள் சன்னதியில் ஒரு விசேஷம் உண்டு. அம்பாள் வீற்றிருக்கும் கருவறைக்கு மேலே உள்ள விமானம் பொன் மயமானது.

அந்தக் காலத்திலேயே தங்க ரேக் சாத்தப்பட்ட விமானம் உடைய பெருமை காமாட்சிக்கு உண்டு. ஆனால், காலப்போக்கில் அந்த தேவியின் பொன் மயமான விமானம் கொஞ்சம் கொஞ்சமாகப் பொலிவிழந்து, அதன் மேல் பதிந்திருந்த தங்கமெல்லாம் அழிந்து, வெறும் செம்பாக, அதுவும் களிம்பு ஏறிக் காட்சி தந்தது.

ஸ்ரீமடத்தில் அப்போதெல்லாம் பெரிதாகப் பண வசதி கிடையாது. அன்பர்களும், பக்தர்களும் கொடுப்பதை வைத்துதான் மடம் நடந்து கொண் டிருந்தது. பல நாட்கள் பிட்சா வந்தனத்துக்கு, யார் வரப் போகிறார்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பது கூட உண்டு சந்நியாச தர்மப்படி அந்த பிட்சாவந்தனத்தை வைத்துத்தான் பெரிய வாளுக்கு பிட்சையே நடக்கும்.

இந்த மாதிரியான சூழலில் ஒரு





கீதா–ராஜன்

நாள் மகா பெரியவா, காமாட்சி அம்மன் கோயிலில் அம்பாள் விமானம் செம்பாகக் காட்சி அளிப்பது குறித்து பேச ஆரம்பித்துவிட்டார்.

"அம்பாள் சன்னதி விமானம் இப்படி இருக்கே... இதை மாத்த வேண்டாமோ?!" அவர் சொன்னபோது மடத்தின் மேனேஜர், வசதி இன்மையை சுட்டிக் காட்டினார்.

பெரியவா யோசனை பண்ணினார். "சரி நாம முயற்சிப்போம். அவளே செஞ்சுப்பா..!" என்று அம்பாள் மீது பாரத்தைப் .போட்டுவிட்டு, ஒரு ஆசாரியை வரவழைத்து,

"மொத்த விமானத்துக்கும் தங்க ரேக் பதிக்க மொத்தமாக எவ்வளவு ஸ்வர்ணம் தேவைப்படும்" என்று கேட்டார்.

வந்தவர் பரிசோதித்து, அளந் தெல்லாம் பார்த்துவிட்டு, குறிப்பிட்ட அளவைச் சொன்னார்.

"இவ்வளவு பவுனுக்கு எங்கே போவது?" என்ற கேள்விக்குறி பெரியவா முகத்தில். 'ஆசை மட்டும் இருக்கு, அம்பாளுக்கு பண்ணணும்னு...ஆனா, என்ன பண்ணறதுன்னு தெரியலையே!' என்று மகாபெரியவா யோசித்துக் கொண்டிருந்த சமயத்துல, அந்தக் காலத்தில் பிரபல சங்கீத வித்வானான மகாராஜபுரம் விஸ்வநாதய்யர், ஆசார்யாளை தரிசனம் பண்ண வந்தார்.

அவரைப் பார்த்ததும் மகாபெரியவா மனதுக் குள் ஏதோ நினைத்தவராக, "உனக்கு கனகதாரா ஸ்தோத்ரம் தெரியுமோ?" என்று கேட்டார்.

"சுமாராகத் தெரியும்" என்றார் விஸ்வநாதய்யர்.

"அப்படின்னா, நீ அதைப்பாடு. யாருக்கெல்லாம் தெரியுமோ, அவாளும் சேர்ந்து பாடுங்கோ!" என்று சொன்னார், மகாபெரியவா.

அதைத் தொடர்ந்து, மகாராஜபுரம் அவர்கள் கனகதாரா ஸ்துதியைப்பாட, அங்கே இருந்த பெண்கள் பலரும் அந்த ஸ்துதியை சேர்ந்து சொல்ல ஆரம்பித்தார்கள்.

சுமார் அரை மணிநேரம் முழுமையாகச் சொல்லி முடித்ததும், அங்கே ஓர் ஆச்சரியம் நடந்தது.

அங்கேயிருந்த அத்தனை பெண்களும் தாங்கள் அணிந்து வந்திருந்த நகைநட்டு களைக் கழற்றி மகாபெரியவா முன்னால் இருந்த ஒரு பெரிய மூங்கில் தட்டிலில் வைத்தனர்.

"மகாபெரியவா இந்த நகைகளை எல்லாம் உருக்கி ஸ்வர்ணத்தை எடுத்துக் கணும். காமாட்சி விமானத்துக்கு தங்கரேக் பதிக்கறதுல எங்க பங்கும் இருக்கணும்!" கோரஸாக எல்லோரும் வேண்டினார்கள்.

"ஆசார்யாளோட ஸ்லோகத்தை இன்றைக்குச் சொன்னாலும்



www.aanmeegamalar.com

ஸ்வர்ண மழை பொழிகிறதே!" என்று மகா பெரியவா புளகாங்கிதம் அடைந்தார்.

"கனகதாராவைக் கேட்டுட்டு அன்னிக்கு மகாலக்ஷ்மி தங்கமழை பெய்ய வைச்சா. இன்னிக்கு இத்தனை பெண்கள் சாட்சாத் அம்பாள் ரூபத்துல கனகமழை பெய்ய வைச்சிருக்கா!" என்று மகாபெரியவா சொல்ல, அத்தனை பெண்கள் முகத்திலும் ஆனந்தப் பரவசம்.

மூங்கில் தட்டுல இருந்த நகைகளை அப்படியே ஆசாரி கிட்டே அள்ளிக் கொடுத்து எடை போடச் சொன்னார்.

அதை எடை போட்டுப் பார்த்த போது, தான் கேட்ட பவுனுக்கு ஒரு குந்துமணி கூடவுமில்லை. குறையவுமில்லை என்று அதிசயப் பட்டார் அந்த ஆசாரி.

அடுத்த வாரமே விமானத்துக்கு தங்கரேக் பதித்து, கும்பாபிஷேகமும் அமோகமாக நடந்தது.

ஸ்ரீமடத்தில் பொருளாதாரக் கஷ்டம் நிலவிய போதும், காமாட்சி அம்மனுக்கு பொன்விமானம் அமைக்க வேண்டும் என்று மகாபெரியவா தீர்மானித்து அதை அம்பாளிடமே சொல்லி வேண்ட, தன் அம்சமான பெண்கள் மூலமாகவே அதைச் செய்வதற்கான அனுகிரஹத்தை அம்பாள் அப்போதே தந்துவிட்டாள்.

இந்த அதிசயத்துக்குக் காரணம், சாட்சாத் மகேஸ்வரனின் அம்சமாகவே திகழ்ந்த மகாபெரியவாளின் மகிமை அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்.

இந்த யுகத்தில்கூட கனகதாரா ஸ்தோத்திரத்திற்கு இவ்வளவு வலிமையுள்ளதை பெரியவா மிக அழகாக நிருபித்து காட்டினார்.

பொருளாதாரத்தை செழிப்பாக வைக்க நாமும் கனகதாரா ஸ்தோத்திரத்தை வீட்டில் புழங்க விடுவோம்.

– தொகுப்பு கீதா ராஜன்

தொடர்பு எண்: +91–8825844033

# ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்கிய பீடத்தில் சிறப்பு யாகம் பூஜை

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டையில் அமைந்துள்ள ஸ்ரீதன்வந்திரி ஆரோக்கிய பீடத்தில், டாக்டர் முரளிதர ஸ்வாமிகள் தலைமையில் வருகிற 21.02.2021 மற்றும் 28.02.2021 ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 4 மணி முதல் 6 மணிவரை சரபேஸ்வரர் ஹோமம் நடை பெறவிருக்கிறது.




கண்திருஷ்டிகள், நேரடி மற்றும் மறைமுக எதிரிகளால் செய்யப்படும் தீவினைகளின் பாதிப்புகளை நீக்கவும், குழந்தைப் பேறு இல்லாத தம்பதிகளுக்கு குழந்தை வரம் வேண்டியும், கடன் தொல்லைகள் தீரவும், திருமணத்தடை, தாமதங்கள் போன்றவை விலகவும் சிறப்பு ஹோமங்கள் நடைபெறவிருக்கின்றன.

முன்னதாக 19.02.2021 அன்று 27 நட்சத்திரத்திற்குரியவர்களின் நலன்களை கருதி அன்று காலை 9 மணிமுதல் 12 மணிவரை ரதசப்தமியில் அஸ்வமேத பூஜைகள் நடைபெறவிருக்கின்றன. இந்த பூஜை ராஜ யோகங்கள் பெற்று, தொழில்வளம், வண்டி வாகனம், குழந்தை பேறு, அரசியல், அரசாங்கம், சினிமா, வர்த்தகம், அதிக லாபம் பெற, எதிரி தொல்லை அகல போட்டி பந்தயங்களில் வெற்றி பெற மற்றும் பல்வேறு நன்மைகள் வேண்டியும் நடைபெறவிருக்கிறது. இந்த பூஜை மற்றும் யாகத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்கிய பீடத்தை தொடர்பு கொண்டு பலன்களை பெறலாம். மேலும் விபரங்களுக்கு 9443330203, 04172–230033 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

www.aanmeegamalar.com


# ஆன்மீக வழியில் அமைதி

## 12

மனிதர்கள் ஒரு பொருளை விரும்பி அடைவதன் மூலம் கிடைக்கும் இன்பம் அல்லது ஆனந்தம் பற்றி சிந்தித்துப் பாருங்கள். அந்த இன்பம் தரக்கூடிய பொருள் மனிதன் தனக்கு கிடைக்கவேண்டும் என்பதற்காக யாகம் பூஜை தானதர்மங்கள் விரும்பியோ விருப்பமில்லாமல் செய்து கொண்டிருக்கின்றான். அவ்வாறு மனிதர்களாகிய நாம் தேடிய பொருள் மூலம் கிடைக்கும் ஆனந்தம் சுகம் இன்பம் நம்மிடம் நிரந்தரமாக இருப்பது இல்லை. ஒரு பொருளிலிருந்து கிடைக்கும் இன்பம் மகிழ்ச்சி நித்தியமாக இல்லாமல் அநித்தியமாக இருக்கிறது.

ஒரு பொருளை அடைவதால் நமக்கு முற்றிலும் இன்பம் கிடைப்பதில்லை என்று கூற முடியாது. ஒரு பொருளினால் வரக்கூடிய இன்பம் மகிழ்ச்சி ஆனந்தம் நிரந்தரமாகக் நமக்கு கிடைப்பதில்லை. நிரந்தரமாக நம்மிடம் இருப்பதுமில்லை. எந்த ஒரு பொருளை அடைந்தால் இன்பம் என்று கருதி அதனை நாம் அடைந்தோமோ அல்லது வாங்கினமோ அந்தப் பொருள்மூலம் கிடைத்த இன்பம் மகிழ்ச்சி சிலநேரங்களில் சூழ்நிலையின் காரணமாக துன்பமாக முடிந்து விடுகிறது. அவ்வாறு நமக்கு துன்பமாக முடியும்போது நாம் விரும்பிய பொருளையும் அதனால் வரக்கூடிய ஆனந்தத்தை மகிழ்ச்சியையும் வேண்டாமென்று விட்டு விடுகிறோம். நம்மை அறியாமல் மகிழ்ச்சியை இழந்து விடுகிறோம் இது மனித இயல்பு.

எடுத்துக்காட்டாக ஒருவர் நாள்தோறும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டே இருக்கிறார். அவர் தன்னோட கவலையெல்லாம் மறந்து மனம் அதில் ஆழ்ந்து ஒருவிதமான ஆனந்தத்தை உணர்ந்து மகிழ்ச்சியும் அடைகிறார் என்று வைத்துக் கொள்வோம்.



அந்த மகிழ்ச்சி அவருக்கு எதுவரை நீடிக்கும் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். திடீரென்று கண்பார்வை சிறிது மங்கி விடும்போது, அவர் ஒரு கண்மருத்துவரை நாடுகிறார். மருத்துவர் அவருடைய கண்களை நன்கு பரிசோதனை செய்து பார்க்கிறார்.

பரிசோதனையின் முடிவில் ‘தங்கள் கண்கள் மிகவும் பலவீனமாக இருக்கிறது.

உங்களுடைய கண்கள் பாதிப்பு அடையாமல் இருக்க வேண்டுமானால் மிகுந்த ஒளியைத் தரக்கூடிய தொலைக்காட்சி போன்றவற்றைப் பார்க்கும் பழக்கத்தை முற்றிலும் விட்டுவிட வேண்டும்’ என்று அவரிடம் கண்மருத்துவர் கூறிவிடுகிறார். அந்த நபர் உடனே அதன்பிறகு தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதையே விட்டு விடுவார். கண்பார்வையை அவர் இழப்பதற்கு விரும்புவதில்லை. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதன் மூலம் அந்த நபருக்கு மனதுக்கும் கண்ணுக்கும் எவ்வளவு பெரிய இன்பத்தையும் மகிழ்ச்சியையும் கொடுத்துக் கொண்டு இருந்தது. அதனால் கண்ணுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று மருத்துவர் அறிவுறுத்தியவுடன் தொலைக்காட்சி போன்றவற்றை இனி மேல் பார்ப்பதில்லை என்று மனதில் உறுதி எடுத்து விடுகிறார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப்

www.aanmeegamalar.com

பார்ப்பதால் தான் அனுபவித்த ஒருவிதமான ஆனந்தத்தையும் மகிழ்ச்சியையும் விட்டு விடுவதற்கும் அவர் தயங்குவதில்லை. கண்கள் பாதிப்பு ஏற்பட்டு விடும் என்ற பயத்தின் காரணமாக தொலைகாட்சியைப் பார்ப்பதால் கிடைத்த இன்பத்தை மகிழ்ச்சியைகூட துறக்க தயாராகி விடுகிறோம். ஏன் என்றால் அதனால் நம் கண்களுக்கு பாதிப்பு என்ற துன்பம் வந்து விடும்போது, நமக்கு கிடைத்துக்கொண்டிருந்த இன்பத்தை மகிழ்ச்சியைக்கூட விட்டு விடுகிறோம். இதேபோன்றுதான் உலகில் காணும் பொருள்களினால் கிடைக்கும் இன்பம் மகிழ்ச்சியைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் அந்த இன்பம் மகிழ்ச்சி நித்தியமானதல்ல என்று உணர்ந்து கொள்ள முடியும்.

ஒவ்வொரு ஆனந்தமும் மகிழ்ச்சியும் இதேபோல்தான் ஐம்புலன்கள் மூலம் நமக்குக் கிடைக்கிறது. அந்த ஆனந்தத்தினால் ஐம்புலன்களில் ஏதாவது ஒன்று பாதிப்பு ஏற்படுவதை மருத்துவர் மூலம் அறிந்து கொண்டால் அல்லது தங்கள் அனுபவத்தின் மூலம் தெரிந்தவுடன், அப்பொருளினால் வரக்கூடிய ஆனந்தத்தை மகிழ்ச்சியை விட்டுவிடுவதற்கு நாம் தயக்கம் காட்டுவதில்லை. இத்தகைய இன்பம் மகிழ்ச்சி சுகம் நித்தியமானதல்ல என்பதை அனுபவத்தின் மூலம் உணர்ந்து கொள்கிறோம். ஆன்மிகம் மூலம் நிரந்தரமான இன்பத்தை நாடிச் செல்லும்போது, நாம் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

நமது வாழ்வில் துன்பத்திலும் இன்பத்திலும் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று கம்ப ராமாயணத்தில் ஒரு காட்சி. இராமன் தனக்கு பட்டாபிஷேகம் நடைபெறப்போகும் நிகழ்வை நினைத்து அவன் துள்ளிக் குதிக்கவில்லை. அதன் பிறகு தந்தையின் கட்டளைப்படி கானகம் செல்லும்போது இராமன் மனம் கலங்கவில்லை. இதனை கைகேயி கூற்றுக்கு முன்பும் பின்பும் செந்தாமரையைப் போல இருந்தது இராமனின் முகம். கைகேயி கூற்றின் பொருள் உணர்ந்தபோதும் அப்பொழுது மலர்ந்த செந்தாமரையினும் மலர்ச்சியுடன் இராமனின் முகம் இருந்தது என்று கம்பர் கூறுகிறார். மனிதன் துன்பத்திலும் இன்பத்திலும் மனதை சமநிலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை இதன்மூலம் அறிந்து கொள்ளலாம். அவ்வாறு இருக்கும்போது மனிதன் தேடும் மன அமைதி தானாக வந்து சேரும்.

வாழ்க்கையில் ஏதோ ஒரு காரணகாரியத்தினால் ஆனந்தம், மகிழ்ச்சி இன்பம் உங்களிடம் குறைந்து துன்பங்கள் சூழ்வதற்கு ஆரம்பித்தவுடன் தானம் தர்மம் யாகம் எனச் செய்து, அதன்மூலம் வாழ்க்கையில் இழந்த ஆனந்தத்தை அடைய முயற்சி செய்கிறோம். அந்த ஆனந்தம் நிரந்தரமாகக் கிடைப்பதில்லை என்பதை அப்போது உணர்வதில்லை. எந்தப்பொருள் நாம் அடைந்ததால், அனுபவவித்தினால் ஒரு காலத்தில் நமக்கு இன்பத்தை மகிழ்ச்சியை வாழ்க்கையில் சுகத்தைக் கொடுத்ததோ அதேபொருள் சிறிதுகாலத்தில் நமக்கு துன்பத்தைக் கொடுக்கிறது. அதாவது அந்த ஆனந்தம் மகிழ்ச்சி அநித்தியமாக இருக்கிறது. அதாவது எந்தப் பொருள் மூலம் இன்பத்தை அடைந்தாலும் அதன் மூலம் கிடைக்கும் இன்பம் நிரந்தரமானது அல்ல என்பதை நமது அனுபவங்களின் மூலம்




www.aanmeegamalar.com

உணர்ந்து கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக பசியாக இருக்கும்போது நாம் ஒரு சுவைமிக்க லட்டை எடுத்து சாப்பிடுகிறோம். அதன் சுவையும் மணமும் நமக்கு இன்பத்தைத் தருகிறது. ஆனால் நாம் தொடர்ந்து லட்டுகளையே சாப்பிட்டுக் கொண்டேயிருந்தால் திகட்டி விடுகிறது. அது நமது உடலுக்கு ஒவ்வாமல் ஒருவித துன்பத்தையும் தருகிறது. நாம் முதல் லட்டு சாப்பிடும்போது கிடைத்த சுவை இன்பத்தை அளித்த லட்டு, அதிக லட்டுகளை சாப்பிடும்போது நமக்கு துன்பமாக மாறி விடுகிறது. இதிலிருந்து நாம் என்ன உணர்ந்து கொள்ள முடிகிறதென்றால், உலகில் எந்தப்பொருளும் இன்பத்தை நிரந்தரமாகத் தருவதில்லை. அதன் மூலம் கிடக்கும் மகிழ்ச்சியும் நிரந்தரமல்ல என்பதை நாம் நாளடைவில் உணர்ந்து விடுகிறோம். எந்தப்பொருள் முதலில் மகிழ்ச்சியாக இருந்ததோ அதே பொருள்தான் நமக்குத் துன்பத்தினைக் கொடுக்கிறது என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது..

ஒரு பொருளை அடைவதன்மூலம் அனுபவிப்பதன்மூலம் ஆனந்தம் இன்பம் ஓரளவு இருக்கிறது. அந்தப் பொருளைவிட உலகில் இன்பம் கிடைப்பதற்குரிய வேறொரு பொருள் இருக்கிறது என்று மனம் அறிந்தால், நமது மனம் அந்தப் பொருளினை நாடி விடுகிறது. ஏன் என்றால் ஏற்கனவே அடைந்த பொருளினால் கிடைத்துள்ள இன்பத்தைக்காட்டிலும் மற்றொரு பொருளை அடைவதால் அதிக இன்பம் இருப்பதாக நினைத்துக் கொள்கிறோம்.

எடுத்துக்காட்டாக நாம் ஒரு நடுத்தரமான வசதியுள்ள வீடு ஒன்று விலைக்கு வாங்குகிறோம். அதில் குடியிருந்து சிறிது காலம் மகிழ்ச்சியும் அடைகிறோம். நாம் வாங்கிய வீட்டை விட அதிகமான வசதிகள் உள்ள வீடு உள்ளது என்பதை அறிந்தவுடன் மனம் அதனை நாடுவதொடு, அந்த வசதியான வீடு தனக்குக் கிடைக்கும்வரை வாங்கும் வரை அல்லும்பகலும் மனம் துன்பத்தில் சுழன்று கொண்டு இருக்கிறது. நாம் நடுத்தரமான வீட்டில் குடியிருந்து வரும்போது கிடைத்த மகிழ்ச்சியை அப்போது நம்மை



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

அறியாமல் இழந்து விடுகிறோம்.

இதேபோன்றுதான் வாகனங்கள் வாங்கி மகிழ்வது மற்றும் பலவிதமான உடைகள் அணிந்து மகிழ்ச்சி அடைவது போன்றவையாகும். ஏன் நமது நட்பாகக்கூட இருக்கலாம். ஒருவர் நமக்கு பழகுவதற்கு ஆரம்பத்தில் மிகவும் இனிமையாக இருக்கிறார். நாம் அவருடன் எப்போதும் நட்புடன் பேசி சிரித்து ஆனந்தமாக இருக்கிறோமா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். அவரிடம் கோபம் என்ற ஒரு குணம் இருந்தால், இருப்பதாகத் தெரிந்தால் அவர் மூலமாக நாம் துன்பம் அடையும் சூழ்நிலை ஏற்பட்டால், அவர் மீது நம்மையும் அறியாமல் ஒருவிதமான வெறுப்பும் வந்து விடுகிறது.

அந்த நண்பர் ஏதோ ஒரு சூழ்நிலையில் கோபப்பட்டு விட்டால், அதனால் நமக்கு மனதில் வருத்தம் ஏற்பட்டு துன்பத்தில் மனம் ஆழ்ந்து விடுகிறது. எந்தஒரு மனிதனுக்கும் அவருடைய நண்பர்களோ உறவினர்களோ எல்லாவிதங்களிலும அனைத்து சூழ்நிலையிலும் அவர் மனம்போல் திருப்தியாக நடந்து கொள்வதற்கு முடிவதில்லை. ஏதேனும் ஒருகுறைபாட்டினை அவர்களிடம் காண்போம் அல்லது மற்றவர்கள் மூலம் கேட்போம். எனவே ஒருவருக்கு உறவுகளோ நண்பர்களோ நிரந்தர மான ஆனந்தத்தை மகிழ்ச்சியை அமைதியை அவருக்கு அளிப்பதற்கு முடிவதில்லை. இதனை நமது அனுபவத்தின் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம். அப்படிப்பட்ட மகிழ்ச்சி யானது அநித்தியமான மகிழ்ச்சி ஆகும்.

அதாவது நிரந்தரமான ஆனந்தம் அல்ல என்பதை நாம் இதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம். குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்று கூறி யிருக்கிறார்கள் சுற்றம் மட்டுமல்ல நட்பும் இருப்ப தில்லை. அவ்வாறு புரிந்து நமது மனதை தேற்றி செயல்படும்போது சுற்றமும் நட்பும் தொடரும். எனவே நாம் அமைதியை இழந்து விடுவதில்லை.

(அமைதி தொடரும்)

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : C.N.Raja, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

www.aanmeegamalar.com

aanmeegamalar mail book (BI MONTHLY) R.Dis No:1068/2020


# நிருபர்கள் தேவை

முன் அனுபவம் தேவையில்லை....

உங்கள் ஊரில் உள்ள

கோவில்களைப்பற்றிய தகவல்களையும்,

சிறப்புகளையும் e-mail, WhatsApp

வாயிலாக டைப் செய்து அனுப்பும்

அனுபவம் இருந்தால் போதுமானது.

செல்போனிலேயே புகைப்படம் மற்றும்

வீடியோ எடுத்தால் போதுமானது...

கிராமத்து கோவில்களின் சிறப்புகளையும்,

பூஜைகளைப் பற்றியும்

விவரங்கள் அதிகம் வரவேற்கிறோம்...

தொடர்பு கொள்ள வேண்டிய எண்:

9444228203

aanmeegamalar